தமிழ் நாடு

திங்களிதழ்

இதழ் - 38

தமிழ்நாட்டு மக்களின் உரிமைக் குரல்

நன்கொடை உரு.20

மாநிலங்களின் தேர்தல்களை நடத்துகிற உரிமை மாநில அரசுகளின் கட்டுப்பாட்டிலேயே அமைக்கப்படும் ஆணையத்தின் வழியாகத்தான் நடத்தப்படவேண்டும்!

இந்தியத் தேர்தல் ஆணையம் மாநிலத் தேர்தல்களை நடத்தக்கூடாது!!.

மாநில உரிமைகளை ஒவ்வொன்றாகப் பறித்து வருகிற இந்திய அரசு, தேர்தல் ஆணையத்தின் வழியாகவும் தன்னுடைய அதிகாரக் கொடுநெறியை வலை விரிக்கிறது..

கல்வி உரிமை மாநிலங்களுக்கே..
கடல் உரிமை, கனிம வளங்களின் உரிமை,
நெடுஞ்சாலை உரிமை மாநிலங்களுக்கே ஆக வேண்டும் போல தேர்தல் அதிகார உரிமையும் மாநிலங்களிடையேதாம் இருக்க வேண்டும்..

தமிழ்நாட்டளவிலேயே உச்ச நீதிமன்றம் போதுமானது..
தமிழ்நாடு அளவிலேயே தனிப் படை தேவை..
தமிழ்நாட்டின் அளவிலேயே தொடர்வண்டி, வானூர்தி, கப்பல் போக்குவரத்துத் துறைகள் இருந்தாக வேண்டும்.
இல்லையென்றால் மாநிலங்களை இந்திய அரசு அழித்து விடும்.. எச்சரிக்கை தேவை..

திருச்சியில். (கடந்த 17.11.25 அன்று) தமிழக மக்கள் முன்னணியின் சார்பில் சிறப்புத் தீவிரத் திருத்தத்திற்கு எதிராகவும், இந்திய அளவிலான தேர்தல் ஆணையமே கூடாது.. மாநிலங்கள் அளவிலேயே தேர்தல் ஆணையங்கள் உருவாக்கப்பட்டு அதன் பொறுப்பிலேயே தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது..

தோழர் நிலவழகன் ஒருங்கிணைப்பு உரையாற்றிட தோழர்கள் பொழிலன், பேராசிரியர் செயராமன், கண.குறிஞ்சி, தங்க. குமரவேல், செவ்வேள், பாவெல், சுப்பு. மகேசு, தெய்வமணி, செள. சுந்தரமூர்த்தி, நாகேசுவரன், கோப்பெருஞ்சோழன், குணசேகரன் உள்ளிட்ட தமிழக மக்கள் முன்னணி உறுப்பியக்கப் பொறுப்பாளர் தோழர்களும்,
தோழர்கள் மீ. தா. பாண்டியன், கோவன், குருசாமி, பாவலர் பாட்டாளி, சீனி.விடுதலை அரசு, வழக்கறிஞர் கென்னடி, சித்தார்த்தன், மதியவன் இரும்பொறை, சின்னப்பத்தமிழர், உதயகுமார் உள்ளிட்ட ஆதரவு இயக்கங்களின் கட்சிகளின் பொறுப்பாளர் தோழர்களும் நூற்றுக்கணக்கினர் எழுச்சியோடு பங்கேற்றனர்..

நூல் அஞ்சல்

பெறுநர்:

விடுநர்:
தமிழ்நாடு, 4/197, பல்லவன் நகர், 3 ஆவது தெரு,
மேடவாக்கம், சென்னை 600100 கைபேசி 97108 75283,

வெளியீட்டுக் குழு : பொழிலன், பேரா. த. செயராமன், முத்தமிழ், கண. குறிஞ்சி, நிலவழகன், பாவெல்
தமிழ்நாடு (மாத இதழ்) 4/197 பல்லவன் நகர், 3 ஆவது தெரு, மேடவாக்கம், சென்னை 600100 கைப்பேசி 97108 75283, 91713 78874
(கீற்று இணையதளத்திலும் பார்க்கலாம்) மின்னஞ்சல் : thamizhnadu2051@gmail.com
அச்சிட்டோர் : மூகாம்பிகை அச்சகம், 24, வாணியர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600005

வந்தேமாதரம் - என்பது இந்தியப்பார்ப்பனியத்தின் தேசிய கீதம்!

பேராசிரியர் த.செயராமன்
தமிழ்மண் தன்னுரிமை இயக்கம்

இந்துத்துவ மதவெறி வன்முறையாளர்களின் குதூகலக் குரல்!

'வந்தேமாதரம்' பாடல் பங்கிம் சந்திர சாட்டர்ஜி என்ற வங்காளத்து பார்ப்பனரால் எழுதப்பட்டு 150 ஆண்டுகள் ஆகிவிட்டன. 2025 நவம்பர் 7 அன்று அதன் 150 - ஆவது ஆண்டு விழாவை பார்ப்பனிய சக்திகள், இந்துத்துவவாதிகள், ஆர்.எஸ்.எஸ் சங்கிப் பரிவாரங்கள் இந்தியா முழுவதும் கொண்டாடி குதூகலித்தார்கள். அதில் அவர்களுக்கு ஒரு மகிழ்ச்சி இருக்கிறது. இஸ்லாமியர்கள் மீது கொடூரத் தாக்குதல்களையும், கொலைகளையும் நிகழ்த்தி, இஸ்லாமியர்களை நாட்டை விட்டே வெளியேற்றுவது என்ற ஆர்.எஸ்.எஸ் தத்துவத்தின் முன் வடிவமே பங்கிம் சந்திர சாட்டர்ஜி எழுதிய ஆனந்த மடம் புதினம். இவர்கள் இந்திய விடுதலையில் நாட்டம் கொண்டவர்களும் இல்லை; வந்தேமாதரம் என்பது இந்திய விடுதலையைப் போற்றிய பாடலும் இல்லை. இந்தியாவுக்கு விடுதலை பெறுவது என்ற கருத்தியலும் இப்பாடல் எழுதிய காலத்தில் தோன்றியிருக்கவில்லை. இது இந்தியா என்ற நாட்டைப் போற்றி எழுதப்பட்ட பாடலும் இல்லை. வங்காளத்தின் வளத்தையும், இந்துமதப் பெண் தெய்வங்களைப் போற்றியும் பாடப்பட்ட பாடல் அது,

வந்தே மாதரம் பாடலின் 150 - ஆவது ஆண்டைக் கொண்டாடும்படி அழைப்பு விடுத்தவர்கள் அத்தனை பேரும் ஆர்எஸ்எஸ், மற்றும் பாசகவுடன் பரிவாரத் தொடர்பு உள்ளவர்கள் மட்டுமே. ஆர் எஸ் எஸ் அமைப்பு, அதன் அரசியல் பிரிவான பாசிச பாசக அரசு மூலம் இந்துராஷ்டிரத்தைப் படைத்து விட வேண்டும் என்று ஒவ்வொரு தளத்திலும் வேலை செய்து கொண்டிருக்கிறது. அதற்காகவே அனைத்துத் துறைகளையும் ஆர்.எஸ்.எஸ்.காரர்களைக் கொண்டு நிரப்பி இருக்கிறது. வந்தேமாதரம் அவர்களுடைய இந்துராஷ்டிரத்தின் தேசிய கீதம்!

வந்தே மாதரம் பாடலின் 150ஆவது ஆண்டு விழாவை ஓராண்டுக் காலத்துக்கு, 2025 நவம்பர் 7 முதல் 2026 நவம்பர் 7 வரை, கொண்டாடும்படி சென்னையில் இந்திரா காந்தி உள் விளையாட்டு அரங்கில் பிரதமர் மோடி அழைப்பு விடுத்து, நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். மக்கள் அனைவரும் ஆர்வத்துடன் பங்கேற்க வேண்டும் என்றார்; தேசத்தின் ஒற்றுமை, ஒருமைப்பாட்டிற்கு வலு சேர்க்கும் தேசிய உணர்வின் குறியீடு இப்பாடல் என்றும் குறிப்பிட்டார். வந்தேமாதரம் பாடலை ஒலிப்பவர்களின் மனதில் வலிமைமிகு பாரத மாதாவின் பெருமையை உணர்த்தி ஆற்றலை அளிக்கும் சிறப்பு கொண்டது என்றார்.

வன்முறையாளர்கள் வந்தே மாதரம் பாட அழைக்கிறார்கள்!

அன்றைய "வந்தே மாதரம்" முழக்கத்திற்கும் இன்றைய "பாரதமாதா கீ ஜே " முழக்கத்திற்கும் உள்ள தொடர்பைப் புரிந்து கொள்ளலாம். அன்றும் இன்றும் இது வன்முறை முழக்கம்தான். வந்தேமாதரம் பாடல் விழாவை அரசுத் துறைகளும், தனியார் நிறுவனங்களும், ஒருங்கிணைந்து கொண்டாடும்படி மோடி அழைப்பு விடுத்தார். தமிழக பாசக செய்தித் தொடர்பாளர் ஏ.என்.எஸ் பிரசாத் என்பவர் வந்தே மாதரம் 150- ஆவது ஆண்டு விழாவை பள்ளி கல்லூரிகளில் நடத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். சென்ற 1 அக்டோபர் 2025 அன்று ஒன்றிய அமைச்சரவை இந்த கொண்டாட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது. ஒன்றிய அரசின் பண்பாட்டுத் துறை அனைத்து மாநில அரசுகளுக்கும், ஒன்றியப் பிரதேசங்களுக்கும் ஓராண்டு தொடர் நிகழ்வுகளைக் கொண்டாட செயல்திட்டம் (Plan of Action) 18 பக்கங்கள் பரிந்துரைகளை வழங்கியது. முதற்கட்டமாக, இப்பாடல் ஒளிபரப்பப்படுவதுடன், அனைத்து மக்கள் பிரிவினரும், பள்ளி - கல்லூரி மாணவர்கள், ஆர்வலர்கள் பங்கேற்புடன் இப்பாடல் பாடப்படும்; பரப்பப்படும். "வந்தே மாதரம் பாடலின் முழு பதிப்பும் பாடப்படும் " என்று ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்டது. பள்ளி கல்லூரிகளுக்குள் இப்பாடலை கொண்டு செலுத்துவதை பாசக அரசு முக்கிய வேலைத் திட்டமாக கருதுகிறது. எதிர்காலத்தில் இந்து ராஷ்டிரத்தைப் படைக்க இந்த தலைமுறையை மூளைச் சலவை செய்ய வேண்டிய தேவை இருக்கிறது.

பாசக மூத்த தலைவர் தமிழிசை சௌந்தர்ராசன், திமுக கூட்டணிக் கட்சிகளுக்கு வந்தே மாதரம் பாடலைப் பாட அழைப்பு விடுத்திருக்கிறார். வந்தே மாதரம் பாடலின் 150 ஆவது ஆண்டை தமிழக அரசு அரசுவிழாவாக கொண்டாட வேண்டும் என்று கேட்கிறார். பாசக சட்டமன்ற உறுப்பினர் வானதி சீனிவாசன் வந்தே மாதரம் 150- வது ஆண்டு விழா தமிழ்நாட்டில் கொண்டாடப்படவில்லை என்று வருத்தப்படுகிறார். வந்தேமாதரம் என்ற சொல்லாடல் சுதந்திரப் போராட்டக் காலத்தில் ஒரு முழக்கமாகப் பயன்பட்டிருக்கலாம்; ஆனால் இப்பாடல் முழுமையாக மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது அல்ல. இப்பாடல் மதச்சார்பற்ற ஒரு நாட்டில் பொது நிகழ்ச்சிகளில் பாடத் தகுந்தது அல்ல.

பாடலை விடுதலை வேட்கையால் பங்கிம் சந்திரர் எழுதினாரா?

பங்கிம் சந்திர சாட்டர்ஜி (சூன் 27 1838 - ஏப்ரல் 8 1894) வந்தே மாதரம் பாடலை 1876 வாக்கில் எழுதினார். அது எழுதப்பட்ட ஆண்டையும் உறுதியாகக் கூற முடியாது. சுதந்திர வேட்கையால் இவர் இதை எழுதவில்லை. அரசுப் பணியில் இருந்த பங்கிம் சந்திர சாட்டர்ஜி அந்த பணி நெருக்கடியில் இருந்து ஒதுங்கி, ஓய்வாக தன் சொந்த ஊரில் சில நாட்களைக் கழித்து வரலாம் என்று கொல்கத்தாவில் இருந்து சொந்த ஊரான கந்தலாபாடாவுக்கு செல்லும்போது, இரயிலில் கண்ணால் கண்ட காட்சிகளால் ஆர்வம் மேலிட்டு எழுதினார். இதை 1882 - இல் எழுதிய ஆனந்தமடம் என்ற தம் புதினத்தில் சேர்த்தார். ஆனந்தமடம் என்ற புதினம் அவருடைய 'வங்க தர்ஜன்' இதழில் தொடராக வெளியிடப்பட்டது.

வந்தே மாதரம் பாடல் ஒரு கடவுள் வாழ்த்துப் பாடல்!

இதன் முதல் ஆங்கில வெளியீட்டின் தலைப்பு Abbey of Bliss (ஆனந்த கீதம்)என்பதாகும். ஆனந்தமடம் புதினத்தின் முதல் அத்தியாயத்தில் கடவுள் வாழ்த்துப் பாடலாக இது வருகிறது. இந்தப் பாடலுக்கும் இந்திய விடுதலைப் போராட்டத்திற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. ஆனால் இப்பாடலை இந்திய விடுதலைப் போராட்டம் பிற்காலத்தில் உருவி எடுத்துக் கொண்டது.

கொலை அரசியலை கற்பிக்கும் ஆனந்த மடம் புதினம்!

ஆனந்தமடம் புதினம் 18 - ஆம் நூற்றாண்டில், வங்காளத்தில் நவாபுகளின் ஆட்சிக் காலத்தில் நடந்த 'சன்னியாசிகள் புரட்சி' என்பதை அடிப்படையாகக் கொண்டது.

1771 இல் வங்காளத்தில் பஞ்சம் ஏற்பட்டது. அப்போது திருவாரியாக மக்கள் வாழ வழி தேடி வாழ்விடத்தை விட்டு வெளியேறினார்கள். இந்நிலையில் சன்னியாசிகள் கூட்டமாகச் சென்று வீடுகளை சூறையாடினார்கள், சன்னியாசிகள் கொள்ளை அடித்தால் அதன் பெயர் புரட்சி. அப்படித்தான் மதவாதிகள் கருதுகிறார்கள்.

ஆனந்த மடம் கதை இப்படி பேசுகிறது: பக்சிங்கா என்ற கிராமத்தில் மகேந்திரன் என்பவரும் அவர் மனைவி கல்யாணி என்பவரும் உணவு இன்றி தவித்து, வாழ வழி தேடி நகரத்தை நோக்கிச் செல்கிறார்கள். வழியில் மனித இறைச்சி சாப்பிடுகிற காட்டுவாசிகளால் விரட்டப்படுகிறார்கள். இதனால், அவர்கள் பிரிந்து விடுகிறார்கள். கல்யாணி குழந்தையுடன் காட்டுக்குள் ஓடி மயக்கம் ஆகிவிடுகிறாள். இந்து மதத் துறவி சத்யானந்தா என்பவர் அவளைக் காப்பாற்றி பராமரிக்கிறார். அவர் பிற துறவிகளுடன் இணைந்து வங்காளத்தை முஸ்லிம்களிடம் இருந்து விடுவிப்பதற்காக வன்முறைப் போராட்டங்களை கையில் எடுக்கிறார். அவருடன் மகேந்திரன் வந்து சேர்கிறார். சத்யானந்தாவின் சீடர் பவானந்தா. அவர் இளைஞர்களைத் திரட்டுகிறார். சத்யானந்தா அரசுக்கு எதிரானவர் என்று கைது செய்யப்படுகிறார், அதன் பிறகு பவானந்தா அனைவரையும் வழி நடத்துகிறார். மடத்தின் தலைவரான பவானந்தா மூன்று சிலைகளை மகேந்திரனுக்குக் காட்டுகிறார். செகத்தாத்ரி, காளி, துர்கா என்ற அந்த தெய்வங்களின் வடிவில் பாரதமாதா இருப்பதாக இந்த புதினத்தில் வருகிறது. (பாரதம் என்பது வர்ணாசிரம தர்மம் செழிக்கின்ற, பார்ப்பனர்கள் ஆதிக்கம் மேலோங்கி நிற்கும் புண்ணிய பூமி; அதை படைத்து விடுவதுதான் அன்றிலிருந்து இன்று வரை பார்ப்பனர்களின் இலக்கு.) ஆனந்தமடம் புதினத்தில் துறவிகள் ஒரு செங்கல் கோட்டையைக் கட்டுகிறார்கள். அதுவே அவர்கள் தலைமையிடம். அவர்கள் அரசு படைகளுடன் மோதுகிறார்கள். ஆயுதப் பயிற்சி குறைவாக இருப்பதால் தோற்றுப் போகிறார்கள். திரட்டப்பட்ட துறவிகள் வங்காள நவாபுக்கு எதிராகவும், ஆங்கிலேயப் படைக்கு எதிராகவும் போரிடுகிறார்கள். இறுதியில் ஆங்கிலேயப் படை வீழ்ச்சி அடைகிறது. இஸ்லாமியர்கள் பெருமளவில் படுகொலை செய்யப்படுகிறார்கள்; சன்னியாசிகள் ஆனந்தக் கூத்தாடுகிறார்கள்.

இக்கதை இஸ்லாமியர் மீதான கொலைத் திட்டத்தை கருவாகக் கொண்டிருக்கிறது. சத்யானந்தாவின் சீடன் பவானந்தா என்ற இளைஞன் இளைஞர்களை திரட்டி முஸ்லிம் ஆட்சியை எதிர்க்கிறான். இக்கதையில் வரும் ஒரு கதை மாந்தரான மகேந்திரனை தன்னுடன் சேர அழைக்கிறான். இதில் "நம் மதம் அழிந்தது; வர்ணாசிரமத் தர்மம் அழிந்தது; உயிருக்கும் ஆபத்து வந்துவிட்டது!" என்கிறான். இந்து மதத்தைக் காப்பாற்ற முஸ்லிம்களை விரட்ட வேண்டும் என்கிறான். அவன் 7 கோடி தொண்டைகள் முழங்கும் போது, 14 கோடி கைகள் கூரிய வாளேந்தி நிற்கும்போது, பாரதமாதா பலவீனமானவள் என்று நீ நினைக்கிறாயா?" என்று கேட்கிறான். அந்த வந்தே மாதரம் பாடல் இப்படித்தான் பேசுகிறது. பவானந்தா மகேந்திரனை ஆனந்த மடத்து ஆலயத்துக்கு அழைத்துச் செல்கிறான். அங்கே விஷ்ணுவின் மடியில் ஒரு தேவி படுத்திருக்கிறாள். "அவள்தான் நம் பாரதமாதா! நாம் பாரதமாதாவின்

புத்திரர்கள்! செகதாத்ரி ஒளிமயமாக காட்சி தரும் சிலை. ஆதியிலே பாரதமாதா இப்படித்தான் இருந்தாள். இப்போது எப்படி இருக்கிறாள்? இரண்டாவதாக காட்சியளிப்பது நிர்வாணமாக காட்சியளிக்கும் கருங்காளி சிலை. அதைக் காட்டி பாரதமாதா இழிவான நிலையை அடைந்து விட்டதாகக் கூறுகிறான். மூன்றாவது காட்சி, 10 கரங்களை உடைய துர்கா தேவியின் சிலையைக் காட்டுகிறான். " நமது எதிரிகளான முஸ்லிம்கள் முற்றாக ஒழிக்கப்பட்டால், நமது அன்னை பாரத தேவி இந்த கண்கொள்ளா காட்சியைத் தருவாள்! " இலட்சுமி, சரஸ்வதி விக்கிரகங்களைக் காட்டி, 10 கரங்கள் உடைய துர்காவே, தாமரை மலர் மேல் வீற்றிருக்கும் லட்சுமி தேவியே, கல்வித் தாயான சரஸ்வதியே போற்றி! என்று பூசாரி போற்றுகிறான். இதைப் பார்த்த பிறகு, பவானந்தாவுடன் மகேந்திரன் சேர்கிறான். படை திரட்டப்படுகிறது. சனாதன தர்மத்தை காப்பாற்றுவதற்காக சபதம் எடுக்கிறார்கள். பல்வேறு பகுதிகளுக்கு செல்கிறார்கள்.

பங்கிம் சந்திர சாட்டர்ஜி இப்படி விவரிக்கிறார்: "சகோதரரே! விஷ்ணுவை வணங்க வருகிறாயா?" என இளைஞர்களை திரட்டிச் சென்று, முஸ்லிம் கிராமங்களுக்கு தீ இடுகிறார்கள். முஸ்லிம்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள கதறி ஓடுகிறார்கள். அவர்களுடைய சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன. குற்றச் செயல்கள் நடைபெறுகின்றன. கொள்ளையிடப்படும் பொருட்களை பங்கிட்டு விஷ்ணு பக்தர்களுக்கு காணிக்கையாக அளிக்கிறார்கள். இவ்வாறு சூறையாடப்படும் பொருள் கிடைப்பதால், பலர் இவர்களுடைய படையில் சேர்கிறார்கள். ஆனந்தமடம் புதினத்தின் எட்டாம் அத்தியாயத்தில் ஒரு கிராம கொள்ளை பற்றி வருகிறது. திடீரென ஒரு முழக்கம், "முஸ்லிம்களை கொல்லு! கொல்லு!" என்று. அதைத்தொடர்ந்து வந்தேமாதரம் என்ற பாடல் பீறிட்டுக் கிளம்புகிறது. அதைத்தொடர்ந்து ஒரு குரல் கேட்கிறது: "சகோதரர்களே! மசூதிகளை எல்லாம் தரைமட்டமாக்கி, அந்த இடத்திலேயே ராதா மாதவர் ஆலயத்தை கட்டும் நாள் விரைவில் வரும்!" உணர்ச்சி வசப்பட்டு, இந்து மதவாதத்தில் மூழ்கிய இளைஞர்கள் இஸ்லாமியர்களை கொலை செய்யவும், மசூதிகளை உடைக்கவும் உறுதி கொள்ளக்கூடிய அந்த உத்வேகத்தை இந்த புதினம் அளிக்கிறது. இன்றைய ஆர்எஸ்எஸ் மற்றும் சங்பரிவார் அமைப்புகளுக்கு முன்னோடியாக ஆனந்த மடம் திகழ்கிறது.

ஆனந்தமடம் நாடகத்தின் இறுதியில் "இப்போது நமக்கு எதிரிகள் யாரும் இல்லை. ஆங்கிலேயர்கள் நமது நண்பர்கள்! அவர்கள் தங்கள் அதிகாரங்கள் அனைத்தையும் விஷ்ணு கடவுளுக்கே காணிக்கையாக்கி இருக்கிறார்கள்!" என்று பேசுகிறார் சத்யானந்தா.

பங்கின் சந்திர சாட்டர்ஜி

ஆங்கிலேய அரசின் கீழ், துணை மாவட்ட ஆட்சியராக, மாவட்ட நீதிபதியாக பணியாற்றியவர். அவர் ஆங்கிலேயே ஆட்சிக்கு எதிர்ப்பாளர் அல்ல. ஆங்கிலேயர்கள் இந்தியாவை பொருளாதார ரீதியாக சுரண்டியதாகவும் அவர் கருதவில்லை. ஆனந்தமடம் புதினத்தின் கடைசி வரிகள், "The Sanatan virtue could only be restored under the rule of English man as king. They have become successful by eliminating Muslim rule.

So the Sanatan should not wage war against them, and now should allow the English reign continue"

(சனாதன தர்மம் ஓர் ஆங்கிலேயன் அரசனாக இருக்கும் போதுதான் மீண்டும் நிலை நிறுத்த முடியும். ஆங்கிலேயர்கள் முஸ்லிம்களின் ஆட்சியை வெற்றிகரமாக வேரறுத்து இருக்கிறார்கள், ஆகவே சனாதனிகள் ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போர் தொடுக்கக் கூடாது. இப்போது ஆங்கிலேய ஆட்சி தொடர்வதற்கு அனுமதிக்க வேண்டும்.")

துறவிகளின் தலைமைத் தலைவர் ஆங்கிலேயர்கள் நமது கூட்டாளிகள் என்றும் அவர்கள் எதிர்த்து எந்த சக்தியும் வெற்றி கொள்ள முடியாது என்றும் கூறுகிறார். இது பங்கிம் சந்திர சாட்டர்ஜியின் ஆங்கிலேய ஆதரவு நிலைப்பாட்டைக் காட்டுகிறது. ஆங்கிலேயர்கள் ஆட்சியில்தான் சனாதன தர்மத்தை மீண்டும் நிலைநிறுத்த முடியும் என்று நம்புகிறார். உண்மை இப்படி இருக்க, வந்தே மாதரம் பாடல் சுதந்திரப் போராட்டத்திற்காக எழுதப்பட்டது என்று பித்தலாட்டம் செய்கிறார்கள்.

ஆனந்தமடம் புதினம் ஆங்கிலேயர்களுக்கு எதிரானது அல்ல. அது அவர்களிடமிருந்து இந்திய விடுதலையும் கோரவில்லை. இஸ்லாமியர்களை கொன்று அழிப்பது மட்டுமே அது வலியுறுத்திய செய்தி. அதன் இலக்கு வர்ணாசிரமம் செழிக்கும் ஓர் இந்துராஷ்டிரத்தை படைத்து விட வேண்டும் என்பதே. இஸ்லாமியர்களை கொல்லுவதன் மூலம் "பூமியை தூய்மை செய்ய வேண்டும் " என்று பேசுகிறது (purification of the earth from their presence). ஆகவே மனசாட்சியை விற்றவர்கள் மட்டுமே இந்தப் பாடலை ஏற்க முடியும்; மதவெறி வன்மம் மிக்கவர்கள் மட்டுமே இந்த பாடலைப் பாட முடியும்.

முஸ்லிம்களை அழிக்க ஆங்கிலேயர்களோடு கூட்டணி வைத்தவர்கள் இவர்கள்!

வங்காளத்தில் சனாதனத்தை பாதுகாக்க முஸ்லிம் நவாபுகளை எதிர்த்து ஆங்கிலேயர்களோடு இந்து மன்னர்கள் இணைந்து நின்றதற்கான சான்றுகளை வரலாற்றில் காட்ட முடியும். கல்கத்தா லோக்சபை வேட்பாளர் ராசமாதா அம்ரிதா ராய் இக்கருத்தை வலுப்படுத்தும் வகையில் பேசி இருக்கிறார். 1757 ஆம் ஆண்டு பிளாசி போரில் நவாப் சிராஜ்- உத்- தௌலா - வை எதிர்த்து, "இந்து மதத்தைக் காக்க ", ஆங்கிலேயருக்கு ஆதரவாக வங்காள மன்னர் கிருஷ்ண சந்திர ராய் பங்கேற்றார் என்பதை வங்காள அரசகுடும்பத்தை சேர்ந்த இராஜ மாதா அமிரிதா ராய் பதிவு செய்கிறார். (Pradipta Tapadar, 'Royal Family fought against Siraj-ud-daullah to protect Hinduism : BJP nominee 'Rajmata' Amrita Roy', The Print, 28 March 2024).

பங்கிம் சந்திர சாட்டர்ஜி 1882 - இல் ஆனந்தமடம் நூலை முஸ்லிம்களை முற்றிலுமாக ஒழித்துக் கட்டும் நோக்கில் எழுதியதற்கு, அக்காலத்தில், நவாப்புகளின் ஆட்சியில் தங்கள் மேலாதிக்கம் ஆட்டம் கண்டுவிட்ட சூழலால் எழுந்த சிந்தனை காரணமாக இருக்கலாம். பதினெட்டாம் நூற்றாண்டில் வங்காளத்தில் முகலாயர் அதிகாரம் வீழ்ச்சி அடைந்தது. மாமன்னர் ஔரங்கசீப் 1707 இல் இறந்துவிட்டார். அதன் பின்னர் வங்காளத்தில் முகலாயர்கள் முழு அதிகாரம் செலுத்த இயலவில்லை. நவாபுகள் தன்னிச்சையாக அதிகாரம் செலுத்தினர். அதே நேரம் மேற்கு இந்தியாவில் சித்பவன் பார்ப்பனத் தலைமையில் மராட்டியப் படைகள் பெருவீச்சில் படையெடுத்து, மத்திய இந்தியாவைக் கைப்பற்றின. ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பெனிக்கும் வங்காள நவாபுகளுக்கும் மோதல் ஏற்பட்டது. நீண்ட காலமாக முஸ்லிம்களின் ஆட்சியின் கீழ் இருந்த சனாதனவாதிகள் சனாதன தர்மத்தை காக்க ஆங்கிலேயர்களுடன் கைகோர்க்க தயாராக இருந்தனர். இந்த அரசியல் மற்றும் சமூகச் சூழல் ஆனந்தமடம் புதினத்தில் பிரதிபலிப்பதாகக் கருதலாம்.

சர் வில்லியம் ஜோன்ஸ் (1746 1794) வங்காளத்தின் வில்லியம் கோட்டையில் இருந்த பிரித்தானிய இந்தியாவின் உச்ச நீதிமன்றத்தில் இந்து மற்றும் இசுலாமிய சட்டங்களின் நீதியரசராக பணியாற்றியவர். இந்தியவியல் மற்றும் சமஸ்கிருதம் மற்றும் ஐரோப்பிய மொழிகளை கற்றறிந்தவர், இந்திய- ஆரிய மொழிகளுக்கும், இந்திய ஐரோப்பிய மொழிகளுக்கிடையே உள்ள உறவுகளை நிலைநாட்டியவர். வங்காளத்தின் கற்றறிந்த வட்டாரத்தில் ஆங்கிலேயர்களுக்கும் இந்தியப் பார்ப்பனர்களுக்குமான ஆரியஉறவு பற்றிய புரிதல், ஆங்கிலேயர்கள் மீதான உளம் சார்ந்த கூடுதல் நெருக்கத்தை பங்கிம் சந்திர சாட்டர்ஜி போன்றவர்களுக்கு உருவாக்கி இருக்கும் வாய்ப்பும் இருக்கிறது. பார்ப்பனர்களுக்கு முஸ்லிம்கள் தான் எதிரியே ஒழிய, ஆங்கிலேயர்கள் பார்ப்பனர்களுடன் ஆரிய இனத்தொடர்பு கொண்டவர்கள் என்ற சிந்தனை நீண்ட காலமாக இருந்து வருகிறது.

வந்தே மாதரம் பாடலைப் பாட பல மாநிலங்களில் எதிர்ப்பு!

வந்தே மாதரம் பாடலைப் பாட பல மாநிலத்தவர்கள் மறுத்திருக்கிறார்கள்.

1937 இல் ஒரிசா சட்டப்பேரவையில் இப்பாடல் பாடப்பட்டது. சில அதிகாரிகள் இதற்கு எழுந்து நிற்கவில்லை; அமர்ந்திருந்தனர். இது பற்றி சட்டப்பேரவை தலைவரிடம் சிலர் முறையிட்டனர். அது அவரவர் விருப்பம் என்று சபாநாயகர் கூறிவிட்டார்.

1938 - இல் சென்னை மாகாணத்தில் பிரதமராக இராசகோபாலாச்சாரியார் பொறுப்பேற்றார். சட்டப்பேரவைத் தலைவராக ஆந்திராவின் கிழக்கு கோதாவரி மாவட்டப் பகுதியைச் சேர்ந்த புலுசு சாம்பமூர்த்தி என்பவர் இருந்தபோது, அவையில் வந்தேமாதரம் பாடல் பாடப்பட்டது. இதை எதிர்த்து முஸ்லிம் லீகு உறுப்பினர்கள் கடுமையாகக் குரல் எழுப்பினர். இதைத்தொடர்ந்து, பிரதமர் இராசகோபாலாச்சாரியார் ஒரு சமாதான நடவடிக்கையை பரிந்துரைத்தார். காலை 11.00 மணிக்கு அவை அலுவல் தொடங்குவதற்கு முன்னதாகவே வந்தேமாதரம் பாடலைப் பாடி விடலாம் என்றார். அதுமட்டுமின்றி, வேண்டுமானால் வந்தே மாதரம் பாடலுடன் மற்ற மதப் பாடல்களையும் சேர்த்து பாடலாம் என்றார். இதை முஸ்லிம்கள் ஏற்கவில்லை. ஆகவே வந்தேமாதரம் பாடல் கைவிடப்பட்டது.

தொடர்ந்து, அதிகாரபூர்வமாக வந்தே மாதரம் பாடலை ஏற்கச் செய்து விட வேண்டும் என்ற முயற்சி இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. அதற்கு இந்தியா முழுவதும் எதிர்ப்பும் இருந்து கொண்டிருக்கிறது. 1998 - இல், பாசக ஆட்சி காலத்தில் கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் 'சரஸ்வதி வந்தனா' பாடல் பாடப்பட்டது. இது நாடு முழுவதும் எதிர்ப்பலையை உருவாக்கியது.

2006 இல் வந்தே மாதரம் பாடலின் 100 வது ஆண்டு விழாவிற்கு எதிர்ப்பு!

2006 ஆம் ஆண்டு செப்டம்பர் 7ஆம் நாள் வந்தே மாதரம் பாடலுக்கு நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. பகல் 11.00 மணிக்கு அனைத்து கல்வி நிறுவனங்களிலும் அப்பாடலை விருப்பமுள்ளவர்கள் பாடலாம் என்று மத்திய மனிதவளத் துறை அமைச்சர் அர்ஷுன் சிங் உத்தரவிட்டார். வந்தே மாதரம் பாடலைப் பாட இஸ்லாமிய அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்தன. தமிழ்நாடு அரசு பாடலைப் பாடுவதை மாணவர்களின் விருப்பத்திற்கு விட்டுவிட்டது. பாசக ஆளும் மாநிலங்களில் இப்பாடலைப் பாடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இப்பிரச்சனையை எதிர்கொள்ளும் வகையில், பல மாநிலங்களில் மாணவ - மாணவியரை அன்றைய நாள் பள்ளிக்கு அனுப்புவதை பெற்றோர்கள் தவிர்த்தனர்.

2006- ஆம் ஆண்டு, அனைத்துப் பள்ளிக் கல்லூரிகளுக்கு வந்தேமாதரம் பாடல் இசைவட்டுகளாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. விருப்பமுள்ளவர்கள் பாடலாம் என்று மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் கூறியதை எதிர்த்து நாடாளுமன்றத்தில் பாஜக உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர். "வந்தே மாதரம் பாடுவதை ஏன் கட்டாயமாக்கவில்லை?" என்று குரல் எழுப்பினர்.

பள்ளி கல்லூரிகளில் இப்பாடலைப் பாட வேண்டும் என்று 2006- இல் ஒன்றிய அரசு வலியுறுத்தியதற்கு கடுமையான எதிர்ப்பு பல்வேறு கட்சிகளிடம் எழுந்தது.

தமிழ்நாட்டில், மயிலாடுதுறையில் ஏ.வி.சி கல்லூரி (தன்னாட்சி) தன் எதிர்ப்பை மிகச் சரியாகப் பதிவு செய்தது. சரியாக 11.00 மணிக்கு ஒட்டுமொத்த கல்லூரி மாணவர்களும் கல்லூரியை விட்டு வெளியேறினார்கள். கல்லூரியின் இரும்பு வாயிற்கதவுகள் இழுத்து மூடப்பட்டன. இதை ஆசிரியர்களும் கல்லூரி நிர்வாகமும் எதிர்பார்க்கவில்லை. இது இந்துத்துவவாதிகளுக்கும், அரசு அதிகாரிகளுக்கும் அதிர்ச்சியை அளித்தது. கல்லூரி முதல்வருக்கு மயிலாடுதுறை நகரத்திலிருந்து அரசியல் பிரமுகர்களின் ஆவேசக் குரல்கள் எச்சரிக்கை விடுத்தன. கல்லூரி நிர்வாகத்தில் உள்ள பிற உறுப்பினர்கள் எரிச்சல் அடைந்து முதல்வரிடம் கேள்வி எழுப்பினார்கள். ஏ வி.சி கல்லூரி வரலாற்றுத் துறை மாணவர்கள் மீது விசாரணை வந்தது. மாணவர்களின் போராட்டத்தைக் கல்லூரி நிர்வாகத்தால் எதுவும் செய்ய முடியவில்லை. வந்தேமாதரம் பாடலுக்கு நூறாவது ஆண்டு விழா நடைபெற்ற போது சரியாக பகல் 11 மணிக்குக் கொண்டாட இந்திய ஒன்றிய அரசு அழைப்பு விடுத்த நிலையில், அதே நேரம் சரியாக 11 மணிக்கு, ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்லூரி வாயிலை இழுத்து மூடி, ஒட்டுமொத்தமாக வெளிநடப்பு செய்து, வேலை நிறுத்தம் செய்து, தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்தனர் என்பது மிக முக்கியமான செய்தி.

வந்தேமாதரம் பாடலை காங்கிரஸ் கட்சி ஏற்றுக்கொண்டது நியாயமற்றது!

நாடு முழுவதும் வந்தே மாதரம் பாடலுக்குத் தொடர்ச்சியாக இஸ்லாமியர்கள் எதிர்ப்பைக் காட்டியநிலையில், காங்கிரஸ் கட்சி இப்பாடலை ஏற்றுக் கொண்டது நெருடலான ஒன்றாகும்.

1896 - ஆம் ஆண்டு, கொல்கத்தாவில் இந்திய தேசிய காங்கிரஸ் 12- ஆவது மாநாடு நடைபெற்றபோது, இரவீந்திரநாத் தாகூர் முயற்சியில் வந்தேமாதரம் பாடல் மாநாட்டின் ஆரம்ப நிகழ்ச்சியாகப் பாடப்பட்டது. அதற்கு இசையமைத்தவர் இரவீந்திரநாத் தாகூர். கொல்கத்தா அமர்வின் தலைவர் ரஹ்மத்துல்லாஹ் எம். சயானி. வந்தே மாதரம் பாடலின் முதல் இரண்டு பத்திகள் (சரணங்கள்) மட்டுமே ஏற்கப்பட்டது.

1905 – க்குப் பிறகு ஏற்பட்ட மாற்றம்!

வங்கப்பிரிவினை வந்தேமாதரம் பாடலைத் தூக்கி நிறுத்தியது!

1905 - ஆம் ஆண்டு வங்காளத்தில் போராட்டக்காரர்களின் பாடலாக இது மாறியது. வங்கத்தின் வளத்தைப் பாடுகிற, துர்க்கை, காளி, இலட்சுமி ஆகிய பெண் தெய்வங்களை பாடுகிற இப்பாடல், வங்காளத்தில் போராட்டக்காரர்களுக்கு ஏற்புடையதாக இருந்தது. 1905 - ஆம் ஆண்டு வாக்கில் சுதந்திரப் போராட்டம் என்பது கிடையாது. 1885 ஆம் ஆண்டில் உருவான காங்கிரஸ் அமைப்பினர் 1905 வரையிலும் பணிவான விண்ணப்பதாரர்களாகவே (Humble Petitioners) இருந்தார்கள். 1905 - ஆம் ஆண்டு விரிந்து பரந்த பெருமாகாணமாக இருந்த வங்காளம், நிர்வாக வசதி கருதி அன்றைய வைஸ்ராய் கர்சான் பிரபுவால் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. வங்காள பெருமாகாணம் 1,89,000 சதுர மைல்களைக் கொண்டது (4,89,510. சதுர கிலோ மீட்டர்கள்), அப்போதே 8 கோடி மக்கள் அதில் வாழ்ந்தார்கள். நிர்வாக வசதிகளைக் கருதி, மேற்குவங்கம் 1,41,580 சதுர மைல்கள் பரப்பளவும், 5.4 கோடி மக்கள் தொகையும் கொண்ட மாகாணமாகவும், கிழக்கு வங்கம் மற்றும் அசாம் ஆகியவை ஒரே மாகாணமாக, 1,06 ,540 சதுர மைல்கள் பரப்பளவும் 3.1 கோடி மக்கள் தொகையும் கொண்ட மாகாணமாகவும் பிரிக்கப்பட்டது. மேற்கு வங்கத்தில் இந்துக்கள் அதிக எண்ணிக்கையிலும், கிழக்கு வங்கத்தில் இஸ்லாமியர் அதிக எண்ணிக்கையிலும் இருந்தனர்.

இவ்வாறு, இஸ்லாமியர் அதிகம் உள்ள ஒரு மாகாணம் உருவானதில் ஏற்பட்ட காழ்ப்புணர்வின் காரணமாக, வங்காளத்தில், மத அடிப்படையில், இந்துமதவாத தேசிய உணர்வு உருவாக்கம் பெற்றது. மகாராஷ்டிராவிலும் வேறு மாகாணங்களிலும் இருந்த, உயர் சாதி மனநிலையில் வர்ணாசிரம சமூகக் கட்டமைப்பை தளர்ச்சியின்றி மீண்டும் நிறுவி விட வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்த பார்ப்பனர்கள், வங்காள பார்ப்பனர்களின் இந்து மத உணர்வைப் பிரதிபலித்தனர். இந்தியாவின் எந்தப் பகுதியிலும் இஸ்லாமியர்களின் கை ஓங்கி விடக்கூடாது என்பதில் அவர்கள் குறியாக இருந்தனர். வங்கப் பிரிவினையை ஏற்க மாட்டோம் என்று போராட்டங்கள் தொடர்ந்தன. அதன் பொருள் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள ஒரு மாகாணத்தை அமைக்க விட மிட்டோம் என்பதுதான். 1911 இல் மீண்டும் கிழக்கு வங்கமும், மேற்கு வங்கமும் ஒன்றாக இணைக்கப்பட்டன.

வந்தே மாதரம் பாடலுக்குத் தொடர்ந்த ஆதரவு!

1896 - இல் இரவீந்திரநாத் தாகூர் கல்கத்தா மாநாட்டில் இப்பாடலை இசைக்கச் செய்தார். 1901 - இல் தக்கின சரண் சென் கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டில் இப்பாடலைப் பாடினார். லாலா லசபதிராய் லாகூரில் 'வந்தேமாதரம்' என்ற பெயரில் ஓர் இதழைத் தொடங்கினார். 1905 - இல் ஹிராலால் சென் இந்தியாவின் முதல் அரசியல் திரைப்படத்தை இந்த பாடலுடன் நிறைவு செய்தார். 1907 இல், முதன் முதலாக இந்திய நாட்டுக் கொடியை, செர்மனியில் வடிவமைத்து, பார்சி பெண்மணியான பிகாஜி ருஸ்தம் காமா ஏற்றும்போது, அதன் நடுவில் வந்தேமாதரம் என்று எழுதப்பட்டிருந்தது. 1929 இல் ஆர்யா பிரிண்டிங் பிரஸ் (லாகூர்) வெளியிட்ட புத்தகத்தில் வந்தே மாதரம் பாடலின் முதல் இரண்டு பத்திகள் (சரணங்கள்) அந்நூலின் 11 - ஆம் பக்கத்தில் அச்சிடப்பட்டன.

இந்திய விடுதலைப் போரின் குறியீடாக கருதப்பட்ட காந்தியார் இப்பாடலைப் பாடுவதை ஆதரித்தார். 1946 சனவரி மாதம், அசாமில் கௌஹாத்தியில் காந்தியார் "செய்ஹிந்த் முழக்கம் வந்தே மாதரத்தை அப்புறப்படுத்தி விடக் கூடாது" என்று குறிப்பிட்டார். காங்கிரஸ் தொடக்கக் காலத்தில் இருந்தே வந்தே மாதரம் பாடலைப் பாடி வருவதை நினைவூட்டி காந்தியார் பேசினார்.

காந்தியார் தம் கடிதங்களின் தலைப்பில் வந்தேமாதரம் எனக் குறிப்பிடத் தொடங்கியிருந்தார்,

1942இல், வெள்ளையனே வெளியேறு இயக்கம் நடைபெற்ற போது மாஃபான்கினி ஹஸ்ரா (Mafangini Hazra) என்ற பெண் தலைவர் ஆங்கிலேயப் படை துப்பாக்கிச் சூடு நடத்திய போது, "வந்தேமாதரம், என்று முழங்கிக் கொண்டே உயிர் நீத்தார்.

1937- ஆம் ஆண்டு இந்தியத் தேசிய காங்கிரஸ் இப்பாடலின் முதல் இரண்டு பத்திகளை மட்டும் தேசியப் பாடலாக ஏற்றது. மௌலானா அபுல்கலாம் ஆசாத், சவஹர்லால் நேரு, சுபாஷ் சந்திரபோஸ், ஆச்சாரிய தேவா, இரவீந்திரநாத் தாகூர் ஆகியோர் அப்படி ஏற்பதை ஆதரித்தனர். ஆனால் அப்பாடலைப் பாட அனைவரும் வற்புறுத்தப்படவில்லை. இப்பாடலை ஏற்பவர்கள் விருப்பம் போலப் பாடலாம் என்றனர். அனைத்து இந்திய முஸ்லிம் லீக் மற்றும் முகமது அலி ஜின்னா போன்றோர் இப்பாடலை எதிர்த்தனர். முதல் இரண்டு பத்திகள் மட்டும் இந்து மத தெய்வங்களோடு தொடர்பு இல்லாமல் இருப்பதால், அதை மட்டும் பாடுவதற்கு காங்கிரஸ் ஏற்பளித்தது.

டாக்டர் இராசேந்திர பிரசாத் இந்திய அரசமைப்பு சட்ட அவையின் தலைவராக இருந்தார். அவரே இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராகவும் பதவி வகித்தார், மதச்சார்பற்ற இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராக பார்ப்பனிய மந்திரங்கள் முழங்க, சடங்கு ஆச்சாரங்களோடு பதவி ஏற்றார். 1950 சனவரி 24ஆம் நாள், இராசேந்திர பிரசாத் "வந்தே மாதரம்" பாடலும், "சன கண மன' பாடலும் சமமாக மதிக்கப்படும் என்றார்; இது உறுப்பினர்களின் மனதை திருப்திப்படுத்தும் என்று தாம் நம்புவதாகவும் குறிப்பிட்டார். ஏனென்றால், வந்தேமாதரம் பாடலை இந்தியாவின் தேசிய கீதமாக ஆக்கிவிட வேண்டும் என்று வர்ணாச்சிரம சனாதனிகள் கடுமையாக வலியுறுத்திக் கொண்டிருந்தனர்,

1947 ஆகஸ்ட் 15 அன்று, ஆச்சாரியா கிருபளானியின் மனைவி சுதேச கிருபளானி அரசியலமைப்புச் சட்ட அவையில் "வந்தே மாதரம்" பாடலைப் பாடினார்.

இவ்வாறு வந்தேமாதரம் என்ற சொல்லாடல் வங்காளத்தின் எல்லையைத் தாண்டி இந்திய அளவில் விடுதலைப் போராட்ட முழக்கமாக மாறியது. ஆனால் அதன் உள்ளீட்டு உணர்வு இந்து தேசியமாகவும், இஸ்லாமிய எதிர்ப்பாகவும் தொடர்ந்து இருந்து வந்தது. மக்களைப் பொறுத்தவரை வந்தே மாதரம் என்பது உணர்ச்சி மிக்க ஒரு முழக்கம்; அவ்வளவே.

நீதிமன்றம் சென்ற சனாதனிகள்!

இந்திய அரசமைப்புச் சட்டம் தேசிய பாடல் பற்றி எதுவும் சொல்லவில்லை. 2019- ஆம் ஆண்டு, வந்தேமாதரம் பாடலை தேசிய கீதமாக (National Anthem) அல்லது தேசியப் பாடலாக (National Song) ஏற்க வேண்டும் என்று டில்லி உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுக்கப்பட்டன. ஆனால், டில்லி உயர் நீதிமன்றம் அந்த மனுவை நிராகரித்தது. (தி இந்தியன் எக்ஸ்பிரஸ் 27 சூலை 2019.)

2022 நவம்பர் மாதம், டில்லி உயர் நீதிமன்றத்தில் "சன கண மன ..." மற்றும் "வந்தேமாதரம்" ஆகிய இரண்டும் ஒரே நிலையில் மதிக்கப்படும் என்று நரேந்திர மோடி அரசு பதிவு செய்தது. (டைம்ஸ் ஆப் இந்தியா, 7 நவம்பர் 2022.).

வந்தே மாதரம் பாடல் பற்றி பெரும்பான்மை மக்களுக்கு எதுவும் தெரியாது!

வந்தே மாதரம் பாடல் இந்துமதப் பெண் தெய்வங்களையும், வங்க இயற்கை வளத்தையும் பாடுகிறது; ஆனால், அது இந்து மத தெய்வங்களைப் பாடுகிறதா, அல்லது வங்க நாட்டைப் பாடுகிறதா என்று எளிய மக்கள் புரிந்து கொண்டதில்லை; புரிந்து கொள்ள முயன்றதும் இல்லை. இது ஒரு வசதியை இந்துத்துவாதிகளுக்கு தருகிறது. இப்பாடலைப் பற்றி, மக்களுக்கு ஒரு குருட்டுப் புரிதல் மட்டுமே உள்ளது. இதை தேச பக்திப் பாடலாகக் கருதுகிறார்கள். இந்து மதப் பெண் தெய்வங்களைப் பாடுவதையும், இப்பாடல் இடம் பெற்றுள்ள ஆனந்தமடம் புதினம் இஸ்லாமியர்களை படுகொலை செய்வதை வலியுறுத்துவதையும், சாமானிய மக்கள் இப்போதும் அறிந்திருக்கவில்லை.

சென்னை உயர் நீதிமன்றத்தின் அதிரடி உத்தரவு!

கோபாலன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில், பள்ளிகளிலும் மற்றும் அரசு அலுவலகங்களிலும் வந்தே மாதரம் பாட உத்தரவிடக் கோரி மனு தாக்கல் செய்தார். அதனடிப்படையில், 2017 சூலை மாதம் 25- ஆம் நாள்,

சென்னை உயர்நீதிமன்றம் தமிழகத்தின் அனைத்து பள்ளிகளிலும், பல்கலைக்கழகங்களிலும், அரசு அலுவலகங்களிலும் மற்றும் தொழிலகங்களிலும் வாரம் ஒரு முறை 'வந்தே மாதரம்' பாடலை பாடவும், இசைக்கவும் கட்டாயமாக்கியது. மேலும், அரசு அலுவலகங்களிலும் தொழிலகங்களிலும் மாதம் ஒரு முறை இப்பாடல் பாடப்பட வேண்டும் என்றும் கூறியது.

2017 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் வந்தே மாதரம் பாடலைப் பாட வேண்டும் என்று உத்தரவிட்ட சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஹேமன்த் லட்சுமண கோக்கலே (Hemant Lakshman Gokhale) ஆவார். இந்த உத்தரவின் காரணமாக, தமிழக அரசு அனைத்து அரசுப் பள்ளிகளிலும், பல்கலைக்கழகங்களிலும், அரசு அலுவலகங்களிலும், தொழிலகங்களில் வாரம் ஒருமுறை "வந்தே மாதரம்" பாடலைப் பாடுவதைக் கட்டாயமாக்கும் விதிகளில் மாற்றங்களைச் செய்தது. அரசுக்குக் கீழ் உள்ள பல துறைகள் இதனை பின்பற்றி பாடலைப் பாடும் திட்டங்களை அளித்தது. ஆனாலும் வந்தேமாதரம் பாடல் தமிழ்நாட்டு மக்களிடையே வேர் பிடிக்கவில்லை.

மதவெறிப் பாடலைப் பாட தமிழ்நாடு அரசும் ஒத்துழைக்கிறது!

தமிழ்நாடு அரசு வந்தே மாதரம் பாடலின் 150- ஆவது ஆண்டு விழா கொண்டாட்டங்களை பள்ளி, கல்லூரிகளில் மற்றும் மற்ற கல்வி நிறுவனங்களில் நடத்த நடவடிக்கை எடுத்து உள்ளது. தமிழக அரசு மக்களைக் குடும்பத்துடன் இந்த விழாவைக் கொண்டாட ஊக்குவித்து, அனைத்துத் துறைகளுக்கும் வழிகாட்டலை வழங்கி உள்ளது. பாடலை வாரம் ஒருமுறை பள்ளிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் பாட வலியுறுத்தப்பட்டு, அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில் மாதம் ஒரு முறை பாடுவதற்கான சுற்றறிக்கையும் பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

வந்தே மாதரம் பாடலுக்கு பல மாநிலங்களில் எதிர்ப்பு!

வந்தே மாதரம் பாடலை கட்டாயமாக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து, மகாராஷ்டிராவில் பிரச்சனை வெடித்தது. பாரதிய சனதா கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் ராஜ் புரோஹித் மகாராஷ்டிரா முழுவதும் உள்ள பள்ளிகளில் வந்தே மாதரம் பாடுவதை கட்டாயமாக்க வேண்டும் என்றார். ஆனால் எம். ஐ. எம் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் வாரிஸ் யாராவது தன் தலையில் துப்பாக்கியை வைத்தாலும், வந்தேமாதரம் பாட மாட்டேன் என்று அறிவித்தார். சமாஜ்வாடி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மகாராஷ்டிரா மாநில தலைவர் அபு அசிம் அஸ்மி நாட்டை விட்டு தான் வெளியேற்றப்பட்டாலும் வந்தேமாதரம் பாடலைப் பாட மாட்டேன் என்று கூறினார். மீரட், மொராதாபாத், வாரணாசி, கோரக்பூர் ஆகிய நகராட்சிகளில் குடிமைக் கூட்டங்களில் வந்தேமாதரம் கட்டாயமாக பாடப்பட வேண்டும் என்று விதிமுறை செய்யப்பட்டது. ஆனால் இதை கண்டித்து கடும் எதிர்ப்பு எழுந்தது.

2025 ஆகஸ்ட் 16ஆம் நாள் மகாராஷ்டிரா நாக்பூரில் 40 ஆயிரம் சங்கிகள் ஒன்று கூடி வந்தே மாதரம் பாடினார்கள். இதை கின்னஸ் சாதனை என்றனர்,

2006 ஆம் ஆண்டு வந்தே மாதரம் நூற்றாண்டு விழாவுக்கு முன்னதாக இஸ்லாமிய மத பள்ளி தாருல் உலூம் வந்தேமாதரம் பாடல் இஸ்லாமுக்கு விரோதமானது என்று ஃபத்வா வெளியிட்டது.

2013 பகுசன் சமாஜ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜஃபிகுர் ரகுமான் வந்தே மாதரம் பாடப்பட்டபோது மக்களவையில் இருந்து வெளிநடப்பு செய்தார்.

இந்த எதிர்ப்பு தொடக்கம் முதலே இருந்து வருகிறது. 1909 இல் முஸ்லிம் லீகு இப்பாடலை கடுமையாக எதிர்த்தது. அமிர்தசரஸ் முஸ்லிம் லீகின் இரண்டாவது தேசிய அமர்வில் பேசிய கட்சியின் தலைவர் சையத் அலி இமாம் வந்தே மாதரத்தை ஒரு "குழுவாதக் குரல்" என்று விவரித்தார். 1938 மார்ச் 1 அன்று லாகூரில் இருந்து வெளியிடப்பட்ட தி நியூ டைம்ஸில் ஒரு கட்டுரையில் முகமது அலி ஜின்னா தம் எதிர்ப்பைப் பதிவு செய்தார்.

ஆர்.எஸ்.எஸ் காரர்கள் கோரிக்கை! "சன கண மன" பாடலுக்கு இணையான தகுதி வந்தேமாதரம் பாடலுக்கு வேண்டுமாம்!

ஆர்.எஸ்.எஸ்- காரர்களும், பிற சங்பரிவார் அமைப்புகளும் வந்தே மாதரம் பாடலுக்கு உரிய மரியாதை அளிக்கப்பட வேண்டும் என்று பரப்புரை செய்வது, மற்றும் 'சன கண மன' பாடலுக்கு இணையாக நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்துவது மட்டுமின்றி, வழக்கு மன்றங்களிலும் வாதாடுகிறார்கள் என்றால், அவர்களுடைய நோக்கம் என்ன? சன கண மன ... எனத் தொடங்கும் தேசிய கீதத்தைவிட அவர்களுக்கு வந்தேமாதரம் பாடலே முக்கியமானது. அது விடுதலைப் போராட்ட பாடல் என்பதால் அதை அவர்கள் விரும்புகிறார்கள் என்று கூறுவதாக இருந்தால், அவர்கள் இந்திய விடுதலைக்குப் போராடியவர்களும் இல்லை; அவர்கள் நாட்டுப்பற்று உள்ளவர்களும் இல்லை; இந்திய நாட்டின் பல்வேறு மொழியின, பல் சமூக மக்களைச் சமமாக மதிக்கக் கூடியவர்களும் இல்லை. அப்படியெனில் அவர்களுடைய நோக்கம்தான் என்ன? அவர்களுடைய நோக்கம், ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலத்தில் சற்றே தளர்ச்சியுற்ற சனதனத்தை, பிறப்பின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வுகளை நிலை நிறுத்தக்கூடிய வர்ணாசிரமத் தர்மத்தை, மீண்டும் தளர்ச்சியின்றி நிலை நிறுத்துவதுதான். அதற்கு இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட மதச் சிறுபான்மையரை அழித்தொழிக்க வேண்டும். அதைத்தான் அவர்களுடைய குருவான எம்.எஸ். கோல்வால்கரும் சொன்னார்; சாவர்க்கரும் கூறினார்; அதைத்தான் இப்போது ஆர்எஸ்எஸ்- காரர்களும் கூறி வருகிறார்கள். ஆகவே, அவர்களுடைய இன்றைய ஆர்எஸ்எஸ் சிந்தனைகளுக்கும், RSS - இன் செயல்திட்டங்களுக்கும் முன்னோடியாக விளங்கியது ஆனந்த மடம் என்ற புதினமும், அதில் வரும் வந்தேமாதரமும்தான்.

மோடியின் அறிவிப்பு அரசியல் சட்ட அவையின் முடிவுக்கு எதிரானது!

இந்திய பிரதமர் நரேந்திர மோடி "வந்தேமாதரம் பாடல் முழுவதுமாக நிகழ்ச்சிகளில் பாடப்படும்" என்று அறிவித்திருக்கிறார். இது 1950 - இல் அரசியல் அமைப்பு சட்ட அவை எடுத்த முடிவுக்கு எதிரானது. வந்தேமாதரம் மூலப் பாடலில் ஆறு பத்திகள் உள்ளன. அவற்றைப் பாடுவதற்கு அனுமதி இல்லை. இப்பாடலை முழுவதுமாக தடை செய்ய கோரிக்கை எழுந்தது. அடிப்படையில் இந்துத்துவவாதியான டாக்டர் ராசேந்திர பிரசாத் இப்பாடலை பாட அனுமதிக்கலாம் என்பதற்கு முட்டாள்தனமான ஒரு விளக்கத்தை கொடுத்தார். அதில் வரக்கூடிய துர்கா என்ற சொல் எந்த சிலையையும் குறிக்கவில்லை என்றும், ஆனால் அது தாய் நாட்டிற்கு மற்றொரு பெயர் என்றும் குறிப்பிட்டார். வந்தேமாதரம் பாடல் உருவ வழிபாட்டை வலியுறுத்த வில்லை என்றார். கல்வியறிவு அற்ற தற்குறி கூட இந்த விளக்கத்தை ஏற்க முடியாது.

1937 - இல் காங்கிரஸ் செயற்குழு முதல் இரண்டு சரணங்களை மட்டும் பாடப் பரிந்துரை செய்தது. 1937 அக்டோபர் 26 ஆம் தேதி சவஹர்லால் நேருவுக்கு கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் எழுதிய பரிந்துரைக் கடிதத்திலும் முதல் இரண்டு பத்திகள் மட்டுமே பாட பரிந்துரைக்கப்பட்டது. அந்த இரண்டு பத்திகள் மட்டுமே தேசிய பாடல் (National Song) என ஏற்கப்பட்டது. அதுவே இன்று வரை நடைமுறையில் இருந்து வருகிறது. டாக்டர் ராஜேந்திர பிரசாத் அதைத்தான் அறிவிப்பும் செய்தார். ஆனால் இன்று இந்திய பண்பாட்டுத்துறை வந்தேமாதரம் முழுப் பாடலையும் பாடும்படி அறிவுறுத்துகிறது. இது இந்திய அரசியல் சட்டத்தை வடிவமைத்த தலைவர்களின் கருத்துக்கும் இந்திய அரசியல் சட்டத்திற்கும் எதிரானது.

வந்தேமாதரத்தை மக்கள் ஏற்கும் வகையில் மொழி பெயர்த்த பாரதியார்!

பங்கிம் சந்திர சாட்டர்ஜி எழுதிய வந்தேமாதரம் பாடலை பாரதியார் இரு முறை மொழிபெயர்த்து அளித்திருக்கிறார். அவருடைய பாடலிலும் இந்து பெண் தெய்வங்களின் பெயர்கள் - பார்வதி, கமலை, வெண்மலர் தேவி (கலைமகள்), ஆலயம் தோறும் அணிபெற விளங்கும் தெய்வச் சிலை தேவி, அறிவினை அருளும் வாணி, உள்ளிட்டவை வருகின்றன. 7 கோடி மக்கள், 14 கோடி கைகள் என பங்கிம் சந்திர சாட்டர்ஜி பாடுகிறார். பாரதியார் "30 கோடி வாய் நின்னிசை முழங்கவும், 60 கோடி தோள் உயர்ந்துனக் காற்றவும்..." என்று பாடுகிறார். வந்தே மாதரம் பாடலை இந்தியா முழுமைக்குமானதாக மாற்றும் முயற்சி பாரதியாரிடம் இருந்தது. சமூக சமத்துவம் பேசிக்கொண்டே சனாதனத்தையும் ஆதரிக்கும் போக்கு பாரதியாரிடம் இருந்தது. அவரைப் போன்றவர்கள் வந்தே மாதரம் பாடலைப் போற்றுவதில் நமக்கு வியப்பில்லை.

திராவிட இயக்கம் எதிர்த்த வந்தேமாதரம் பாடல்!

தமிழ்நாட்டுக் கவிஞர்கள் உயர்த்திப் பிடிக்கிறார்கள்!

திராவிட இயக்கம் சனாதனத்தை போற்றும் ஆனந்தமடம் புதினத்தையும், வந்தே மாதரம் பாடலையும், பாரதமாதாக் கருத்தியலையும் கடுமையாக விமர்சித்து இருக்கிறது. திராவிட இயக்கத்தவர்களோடு நெருக்கமாக இருக்கக்கூடிய வேறு சிலர் வந்தேமாதரம் பாடலை ஏற்றிப் போற்றி, அதை மக்கள் ஏற்கும்படி செய்யக்கூடிய போக்கு கண்டனத்துக்குரியது.

வால்மீகி எழுதிய இராமாயணத்தில் குடிகாரனாகவும், பெண் பித்தனாகவும் வருகிற இராமனை தமிழ் மக்கள் ஏற்க மாட்டார்கள். காந்தியாரே இராமாயணத்தில் வரும் ராமன் என் ராமன் அல்ல என்று கூறிவிட்டார். ஆனால், தமிழ் மக்கள் ஏற்கும் வகையில், இராமனின் பண்புகளை மாற்றி அமைத்து, ஆரியத்தின் அடையாளமாகிய இராமனை ஏற்கச் செய்த கம்பரின் செயல் தமிழினத்தை வீழ்த்தியது. தமிழில் இராமாயணத்தை எழுதிய கம்பரின் செயல் தமிழர்களை ஆரியத்துக்கு அடிமையாக்கியது. அதனாலேயே திராவிட இயக்கம் கம்பரை சாடியது.

அதேபோல ஆரியத்தின் சனாதன வர்ணாச்சிரம வெறியை தமிழ் மக்கள் உணராத வகையில்,

தமிழ் கவிஞர்கள் வந்தே மாதரம் பாட்டை தமிழர்களும் ஏற்கும் வகையில் பொருள் மாற்றி எழுதி, மக்கள் மயமாக்கி வருவது மன்னிக்க முடியாத குற்றச் செயல் ஆகும். 1997 இல் கவிஞர் வைரமுத்து ஆனந்தமடத்தின் ஆரிய நச்சுப்பல் தெரியாதபடி மறைத்து, வந்தேமாதரம் பாடலை தமிழ்நாட்டு மக்கள் ஏற்கும் வகையில் எழுதி இருக்கிறார். அதற்கு மனம் கவரும் வகையில் ஏ.ஆர். ரகுமான் இசையமைத்திருக்கிறார். வந்தே மாதரம் என்றால் "தாயை வணங்குகிறேன்" என்றுதான் பொருள். அந்தத் தாய் காளி, துர்கா, இலட்சுமி, சரஸ்வதி போன்ற பெண் தெய்வங்கள். ஆனால், கவிஞர் வைரமுத்து வந்தே மாதரம் என்பதை "தாய் மண்ணே வணக்கம்!" என்று மொழிமாற்றம் செய்து தருகிறார். வந்தே மாதரம் என்பதற்கு "தாய் மண்ணே வணக்கம் " என்று கூறுவது சரியான மொழிபெயர்ப்பா?

மேலும், வந்தேமாதரம் பாடல் இந்தியாவைக் குறிப்பதாக காட்டும் வகையில், 'அந்த பக்கம் இந்தப் பக்கம் கடல்களை கொடுத்தாய்' என்கிறார்.
"வந்தே மாதரம்.. வந்தே மாதரம்..
பாரதம் எங்களின் சுவாசமே..
தாய் மண்ணே வணக்கம்.." என்கிறார்.

பாரதம் எப்படி நம் சுவாசமாக இருக்க முடியும்? இந்துத்துவாதிகளுக்கும், இந்துராஷ்டிரத்தைப் படைக்க வெறி கொண்டலைபவர்களுக்கும் "பாரதம்" படைப்பதே இலக்கு. பார்ப்பனிய மேலாண்மை நிலவும் ஆரிய புண்ணிய பூமி தான் பாரதம். அதை எதிர்த்துதான் தமிழ்நாட்டில் கடந்த கால அரசியல் நடந்தது. அதை எதிர்த்து முறியடிப்பது தான் நம் அரசியலாக இருக்க வேண்டும். ஆனால் இங்கே இலட்சங்களில், கோடிகளில் புரளும் ஒரு கவிஞர் 'பாரதம் எங்களின் சுவாசமே' என்கிறார்; ஆரியத்துக்கு அனுமார் வேலை பார்க்கிறார். இவர்களிடமிருந்து தான் தமிழ்நாட்டின் இளைஞர்களைக் காப்பாற்ற வேண்டி இருக்கிறது.

வந்தேமாதரம் என்பது வெற்றுச் சொல்லாடல் அல்ல!
அது ஆரியத்தின் இந்துராஷ்டிர வேலைத்திட்டம்!

வந்தேமாதரம் இஸ்லாமியர்களுக்கு எதிரானது; அனைத்து சிறுபான்மை சமயத்தவர்களுக்கும் எதிரானது; அது வர்ணாச்சிரமத்திற்கு ஆதரவானது; ஆகவே சூத்திர பஞ்சமர்களுக்கு எதிரானது. அது பார்ப்பனியத்தின் மேலாண்மையை நிலைநிறுத்தக்கூடியது. ஆகவே, அது சமத்துவத்துக்கும், சனநாயகத்திற்கும், சமூக நீதிக்கும் எதிரானது. அந்தச் சொல்லாடலை புறக்கணிப்பதன் மூலம் அந்தக் கருத்தியலையே நாம் புறக்கணிக்கிறோம்.

ஆட்சிப் பீடத்தில் ஆரியம் அமர்ந்து கொண்டு வந்தேமாதரம் பாடச் சொல்லுகிறது. நீதிமன்றத்தில் ஆரியம் நீதிபதியாக வந்து அமர்ந்து கொண்டு வந்தேமாதரம் பாட உத்தரவிடுகிறது. தமிழகத்திற்கு எதிரான, தமிழினத்திற்கு எதிரான இந்த சதிச் செயலை அம்பலப்படுத்தி, வந்தேமாதரத்தை முறியடிக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. கவிஞர் வைரமுத்து போன்றவர்கள் கூறுவதுபோல பாரதம் நமக்கு சுவாசமாக இருக்க முடியாது. பாரதத்தில் நாம் என்றென்றும் சூத்திரர்கள், பஞ்சமர்கள் தான். இறையாண்மைத் தமிழ்த்தேசத்தை நோக்கி நாம் பயணிக்க, வந்தேமாதர பசனைகளை அம்பலப்படுத்த வேண்டும்.

நம் முழக்கம் 'வந்தே மாதரம்' அல்ல
நம் முழக்கம் 'தமிழ்நாடு தமிழருக்கே!' என்பதுதான்.

அம்பேத்கரியக் கருத்தாளர்களிடமும், பெரியாரியக் கருத்தாளர்களிடமும், மார்க்சியக் கருத்தாளர்களிடம் வெளிப்படையான கலந்தாய்வுகள் தேவை..

தமிழ்நாடு நாள் குறித்த பதிவில் அரசியல் மாற்றத்தில் அக்கறையுள்ள அன்புக்குரிய தோழர் ஒருவர் கீழுள்ளவாறு எழுதியிருந்தார்.. அவருக்கும் அவர் போன்ற கருத்துடையவர்களுக்குமாக இது எழுதப்பெறுகிறது :

"எல்லாச் சாதிகளும் கலந்த கலவைதான் இன்றைய சமூகம். இதில் தமிழன் என்று யாரைப் பிரிப்பீர்கள். தமிழன்தான் தமிழனுக்கு எதிரி. நீங்கள் சேரியில் வசிக்கவில்லை அதனால் அந்த மக்களின் துயர் உங்களுக்குத் தெரியவில்லை. தமிழன் என்பதை விடவும் மனிதன் என்பதே சிறந்தது. தமிழ் இனம், தமிழ்த் தேசியம், தமிழ்க்கொடி இவை யாவும் பாசிசத் தன்மை கொண்டது. அண்ணல் அம்பேத்கர் வழியே எங்கள் வழி. அதுவே எங்கள் நெறி." என்று அவர் எழுதியிருந்தார்..

அவரின் கருத்துகளுக்கான சில விளக்கங்களைப் பார்ப்போம்..

"இந்த இந்தியாவை எவ்வாறு என் தாயகமாகக் கருதமுடியும்? நாய்கள், பூனைகளைவிட நாங்கள் தாழ்வாக நடத்தப்படுகிறோம். தன்மானம் உள்ள எந்தத் தீண்டப்படாதவன் இந்தியாவைத் தன் தாய்நாடாகக் கருதுவான்? இந்தியா - எங்களுக்கு அளித்த உதவி - இன்னல்களையும், இழிவுகளையும் மலைபோல் எங்கள் மீது சுமத்தியதே ஆகும். ஆகவே தெரிந்தோ, தெரியாமலோ இந்தியப்பற்று எங்களுக்கு இல்லை என்றால், அதற்கு நாங்கள் அல்லர் பொறுப்பு; இந்தியாவே ஆகும். என்னை இரண்டகன் என்றால் அதற்கும் நான் அல்லன் பொறுப்பு; இந்தியாவே ஆகும்." - என்றவர் அம்பேத்கர்..

பார்ப்பனியத்தையும், முதலாளியத்தையும் வீழ்த்தாமல் அடித்தட்டு மக்கள் விடுதலை பெற முடியாது..
அரசியல் அதிகாரத்தைப் பெறாமல் சாதியை ஒழிக்க முடியாது..
- என்றெல்லாம் முழங்கியவர் அண்ணல்..
அரசியல் அதிகாரத்தைப் பெறுவது என்பது இக்காலத்தில் உள்ள சட்டமன்ற, நாடாளுமன்றத்திற்குள் நுழைந்துவிடுவதால் பெறப்படுவதன்று..
தன்னாலேயே அவ்வாறு செய்ய முடியவில்லை எனத் தன் அமைச்சர் பொறுப்பையே துறந்தவர் அவர்..

இந்திய அரசியல் சட்டத்தால் சாதி ஒழியப் போவதுமில்லை.. குமுக மாற்றத்தை நிறைவேற்றவும் முடியாது என இந்திய அரசியல் சட்டம் கொளுத்தப்பட வேண்டும் என்றும், அவ்வாறு கொளுத்துவதற்கான முதல் ஆளாகத் தான் நான் இருப்பேன் என்றும் நாடாளுமன்றத்திலேயே பேசினார் அம்பேத்கர்..

தான் சாகும் போது இந்துவாகச் சாகமாட்டேன் எனத் தன் மறைவுக்கு முன்பாக இந்து மதத்திலிருந்து முழுமையாக வெளியேறினார்..

மதமாற்றம்தான் குமுக மாற்றத்திற்கு வழி என்றும், சாதி ஒழிப்பிற்குத் தீர்வு என்றும் அம்பேத்கர் இறுதிப்படுத்தவில்லை..

இந்த நிலையில்.. அம்பேத்கர் வழியே எங்கள் வழி என்போர் எவரும்..

* தாங்கள் இந்தியன் இல்லை என்றோ,
இந்து இல்லை என்றோ பதிவு செய்திடுவதில்லை?

* பார்ப்பனியத்தையும் முதலாளியத்தையும் எவ்வகை இணக்கத்திற்கும் இடம் தராமல் எதிர்த்து நிற்பதுமில்லை?

* இந்திய அரசியல் சட்டம் அடித்தட்டு மக்களுக்கான முழுமையான விடிவைத் தேடித் தராது என்கிற நிலையில், அம்பேத்கர் போராடிய அளவில்கூட அவரின் பின்பற்றாளர்கள் போராடுவதில்லை..

இதில்.. அம்பேத்கர் வழிதான் எங்கள் வழி என்பது எது?

தமிழ்நாட்டில் உள்ள ஒடுக்கப்பட்ட சாதி மக்களையே ஒரே அணியில் திரட்ட இயலுவதில்லை. பள்ளர், பறையர், அருந்ததியர் முரண்பாடுகளை இணைக்கத் திட்டமில்லாதவர்கள் இந்தியா முழுக்க உள்ள பட்டியல் மக்களையெல்லாம் ஒரே முழக்கத்தில் திரட்ட முடியுமா?

புத்த வழிபாட்டுக்காக, மூடநம்பிக்கைகளுக்காக ஒன்று சேருகிற பல மாநிலங்களில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் சாதி ஒழிப்புப் போராட்டத்திற்காக ஒன்று சேர இயலாது..

இந்தியா முழுக்க ஒரே குமுக நிலை இல்லை.. வேறுபட்ட தன்மைகளில், சூழல்களில் அடக்குமுறைகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ளனர்.. எனவே ஒரே காரணிக்காக இந்தியாவில் உள்ள தாழ்த்தப்பட்டோர் அனைவரும் ஒரே நேரத்தில் அணி திரண்டுவிட முடியாது என்பதை விளங்கிக் கொள்ளாமல் இருக்கின்றனர். அடித்தட்டு மக்களை எப்படி அணி சேர்ப்பது என்றும், அம்பேத்கர்வழி என்ன என்பதையும், அவரின் கருத்துகள் மட்டுமே சாதி ஒழிப்புக்கு போதுமானவையா, குமுக மாற்றத்திற்குப் போதுமானவையா என விளங்கிக் கொள்ள வேண்டும்..

காசுமீரத்தில், நாகலாந்தில், மிசோரத்தில், திரிபுராவில், மணிப்பூரில் - எனப் பல மாநிலங்களில் தாழ்த்தப்பட்டோர் எனும் பிரிவு மிகக்குறைவாகவோ, இல்லாமலோ இருப்பதை உணர வேண்டும்..

தமிழர் அல்லது தமிழ்த் தேசியம் என்பதான அணி திரட்டல்கள் சாதி ஒழிப்பு நோக்கத்தோடு, வகுப்பு(வர்க்க) ஒழிப்பு இலக்கோடு இருக்க வேண்டும் என்பதே நம்முடைய வலியுறுத்தம்..

அப்படியான நிலையில், தமிழ்த் தேசியம் என்பதே பாசிசம் என்றால் பறையர் என்பது கூட அருந்ததியருக்குப் பாசிசமாகவே தோன்றுவதாகக் கூறலாம்..

அரசியலை, குமுகவியலை, பொருளியலை முழுமையாக ஆய்வு செய்து சாதி ஒழிப்போடான, வகுப்பு (வர்க்க) ஒழிப்போடான பொதுமைக் குமுகத்தைப் படைக்கும் நோக்கத்திலேயே தமிழ்த் தேச உரிமைப் போராட்ட அரசியலை நாம் முன்னெடுக்கிறோம்.. அந்த நிலைகளில் பல கட்டங்களைக் கடந்தும் வந்திருக்கிறோம்..

அம்பேத்கரியக் கருத்தாளர்களிடமும், பெரியாரியக் கருத்தாளர்களிடமும், மார்க்சியக் கருத்தாளர்களிடம் வெளிப்படையான கலந்தாய்வுகள் தேவை..

இந்த மூன்று அரசியல் நிலைப்பாட்டாளர்களிடமும் இணக்கம் தேவை.. இந்த மூன்று நிலைப்பாட்டாளர்களுமே குமுக மாற்றத்தின் மீது அக்கறையுடையவர்கள் என்கிற நிலையில் ஆழ்ந்த கலந்தாய்வுகளும், அடுத்தக் கட்ட நகர்வுக்கு நடந்தாக வேண்டும்..

ஒருவரை ஒருவர் குறை சொல்லிக் கொண்டிருப்பது ஆண்டைகளுக்கே வலு சேர்த்திடும் என விளங்கிக் கொள்ள வேண்டும்..

– பொழிலன்

இந்திய மார்க்சியர்களிடம் உள்ள இரண்டு பெரும் பிழைகளுள்..

ஒன்று அவர்களின் இந்தியாவைப் பற்றிய அரசியல் மதிப்பீட்டுப் பிழையே!

பொழிலன்
தமிழக மக்கள் முன்னணி

மார்க்சியக் கோட்பாடு என்பது மார்க்சுடைய சிந்தனைகளை மட்டுமே கொண்டதன்று..
அதற்குள், குமுகங்களை ஆய்வு செய்த மார்க்சுக்கு முந்தைய கால அறிஞர் பெருமக்கள் அனைவரின் சிந்தனைகளும் உள்ளடங்கியிருக்கின்றன..

திருவள்ளுவத்தின் அறக்கருத்துகளும், ஒப்பரவியக் கருத்துகளும் அதனுள் இருக்கின்றன.. வள்ளலாரியமும் இருக்கிறது..

திருவள்ளுவர் காலத்தில் முதலாளியம் இல்லை..

இன்றைய பன்னாட்டு முதலாளியக் கொடுமைகளை வல்லாட்சி அதிகாரங்களை எதிர்க்க வேண்டுமான அரசியல் திட்டங்களை திருவள்ளுவத்தில் தேட இயலாது..

ஓர் அடிப்படையான குமுகவியல் பார்வையை, மாந்தநேயப் பார்வையை ஒப்புரவிய (சோசலிச)ப் பார்வையைத் திருவள்ளுவம் கொடுக்கிறது.. ஆனால், அதனால் புரட்சிவய மாற்றத்திற்குரிய வழிகாட்டலை, அதற்கான வழிமுறைகளைச் செய்ய இயலாது.

அத்தகைய புரட்சிவயக் குமுக அறிவியல் வழிமுறைப் பார்வையே மார்க்சியம்..

தமிழ்த் தேச விடுதலைக்கு, இந்தியாவில் உள்ள தேசிய இனங்களின் விடுதலைக்கு,

உலக அளவில் உள்ள தேசங்களின் விடுதலைக்கு மார்க்சியத்தாலேயே முழுமையான அரசியல் பார்வையை வகுத்துத் தர முடிகிறது..

திருவள்ளுவத்தை, வள்ளலாரியத்தை, அம்பேத்காரியத்தை, பெரியாரியத்தை.. எல்லாம் உள்ளடக்கிய குமுக அறிவியல் பார்வையுடையதாக மார்க்சியத்தை விரிவுபடுத்திப் புரிந்து கொள்ள முடியும்..

திருவள்ளுவத்திடம் இருக்கிற அறவுணர்ச்சியையும் ஒப்புரவிய உணர்ச்சியையும் எவ்வாறு மார்க்சியத்தின் உள்ளடக்கமாக அமைத்து விளங்கிக் கொள்ள முடியுமோ, அவ்வாறே அம்பேத்கரிய பெரியாரியத்திடம் இருக்கிற பார்ப்பனிய, சாதிய எதிர்ப்புக்குரிய அரசியல் தெளிவையும் மார்க்சியக் கருத்துகளோடு பொருத்தி விளங்கிக் கொள்ள வேண்டும்..

ஆனால், தமிழ்நாட்டில் உள்ள இன்னும் சொன்னால் இந்தியாவில் உள்ள மார்க்சியக் கருத்தாளர்களிடம் அத்தகைய அரசியல் தெளிவு இருந்திடவில்லை..

அவர்களிடம் அடிப்படையாக இரண்டு நிலைகளில் தெளிவின்மை இருந்தது.. இருக்கிறது..

அதனால் அவர்களால் முன்னேறி நகர இயலவில்லை..

ஆர்.எஸ்.எஸ் தொடங்கப்பட்ட காலத்திலேயே தொடங்கப்பட்டிருந்தாலும், பொதுவுடைமைக் கட்சிகள் தொடக்க நிலையில் வளர்ந்த அளவில் கூட பிறகு முன்னேறிடவில்லை.. முன்னேறி நகரவில்லை என்பது மட்டுமின்றி எண்ணற்ற பின்னடைவுகளும் அவற்றிடம் ஏற்பட்டன..

அதற்குக் காரணமாக நடைமுறைப் பிழைகளையே கருத்தில் கொண்டனரே அல்லாமல், கோட்பாட்டுப் பிழைகளை, செயல்திட்டப் பிழைகளைத் திறனாய்வு செய்து கொள்ளவில்லை..

அவற்றில் பிழைகள் இருப்பதை அவர்கள் கருத்தில் கொள்ளவில்லை..

இந்தியப் பொதுவுடைமையரின் இரு பெரும் பிழைகளான அரசியல் கணிப்புகள் குறித்து விரிவாகப் பேசியாக வேண்டும்..

அதில் முதன்மையானது அவர்களின் இந்தியாவைப் பற்றிய அரசியல் மதிப்பீட்டுப் பிழையே..

இந்தியாவைத் தேசம் என்று அவர்கள் மதிப்பிட்டிருக்கின்றனர்.. மதிப்பிட்டும் வருகின்றனர்..

வகுப்பு (வர்க்கப்) போராட்டத்திற்காகப் பாட்டாளி வகுப்பை முழுமையாக அணிதிரட்டுகிற முனைப்பைக் காட்டிலும், அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிற இந்தியத்தேசத்தின் பாதுகாப்பையும் ஒற்றுமையையுமே முதன்மையாகக் கருதுகின்றனர்..

இந்தியப் பாதுகாப்பு என்கிற கருத்தை முன்னிறுத்தி இந்திய அதிகார வகுப்போடு பல நேரங்களில் இணங்கியும் வந்திருக்கின்றனர்..

> *"தேச ஒற்றுமை என்பது காங்கிரஸ் அல்லது பி.ஷே.பி யாக இருந்தாலும் சரி சந்தர்ப்பவாத இடதுசாரி அல்லது புரட்சிகர கம்யூனிசுடுகளாக இருந்தாலும் சரி, அனைத்து முக்கிய அரசியல் நீரோட்டங்களும் நிச்சயமாகக் கவலை கொள்ளுகிறதோர் முக்கிய விசயமாகும். முக்கிய விசயமென்பது, பல்வேறு நிலைப்பாடுகளுக்கிடையில் கறாரான எல்லைக் கோட்டை வரைந்து கொள்வதாகும்."*

- என்று இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மா.இலெ.) தன் கட்சி ஆவணத்திலேயே குறிப்பிட்டிருக்கிறது..

இந்தியப் பொதுவுடைமைக் கட்சியர்கள் தங்களுக்குள் பல கூறுகளில் வேறுபட்டிருந்தாலும் அனைவருமே இதே கருத்துடையவர்களே..

இந்தியா என்பது பிரித்தானிய வல்லரசாலேயே அதன் ஆட்சி அதிகாரத் தேவைக்காகவே உருவாக்கப்பட்டது.. அவர்களுக்கு முன்பு ஆண்ட வீரர்கள் காலங்களிலோ, நிலவுடைமை அரசுக் காலங்களிலோ இந்தியா உருவாக்கப்படவும் இல்லை, ஒரே ஆட்சி அதிகார அரசாகக் கட்டி ஆளப்படவும் இல்லை..

பிரித்தானிய வல்லரசால்தான் பிரித்தானிய இந்திய அரசு உருவாக்கப்பட்டது.. ஏற்றத்தாழ்வான வளர்ச்சி நிலைகளில் இருந்த பல்வேறு மொழி இன மக்களையெல்லாம், அவர்களின் நிலவுடைமை அரசுகளையெல்லாம் தங்கள் அதிகாரத்தின் கீழ் அடக்கி இணைத்துப் பிரிட்டிசு இந்திய அரசை உருவாக்கினார்கள்..

பிரித்தானிய வல்லரசு இங்கிருந்து போகிற போது, பிரிட்டிசு முதலாளிகளின் மூலப்பணக் குவியலில் இருந்த தொழில் நிறுவனங்களோ அவற்றின் சுரண்டல்களோ போய்விடவில்லை.. பன்னாட்டு முதலாளிய மூலப்பணச் சுரண்டல்களுக்கு இடம் அமைத்துத் தருகிற படியான ஒப்பந்தத்தின் கீழேயே அது வெளியேறியது என்பது அனைவருக்கும் தெரிந்ததே..

ஆனால் இந்தியப் பொதுவுடைமையர்கள் அரசியல் அளவில் இந்தியா விடுதலைப் பெற்றதாகக் கொண்டாடினர்..

மார்க்சிய நெறியினராக இல்லாத பெரியாரே பிரித்தானியரிடம் இருந்து பெற்றது விடுதலை இல்லை என்றும், அது இழவு நாள் என்றும் அறிவித்திட, இந்தியப் பொதுவுடைமையாளர்கள் விடுதலை பெற்றதாகப் பெருமளவில் கொண்டாடி மகிழ்ந்தனர்..

பிரித்தானியக் கொள்ளைக்காரனிடமிருந்து, இந்தியப் பார்ப்பனிய பனியா கூட்டத்திற்கு அரசியல் அதிகாரம் கைமாறியதை அவர்கள் அம்பலப்படுத்தவில்லை..

(மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சியினர் சில காலம் அதை மறுத்தாலும் பின்னர் இந்திய விடுதலைபெற்றதாகவே அந்நாளைக் கொண்டாடி வருகின்றனர்.. சில இந்திய மா.இலெ. கட்சியினரும் அதே நிலைப்பாட்டோடேயே உள்ளனர்)

1947 இந்தியா விடுதலை பெற்றதான அறிவிப்புக்கு முன்புவரை, நில ஆளுகைக்குரிய தேசியப் (நன்கு அமைந்துள்ள எந்த ஒரு) பகுதிக்கும் இந்திய ஒன்றியத்திலிருந்து பிரிந்து போகும் உரிமை உண்டு என்று இ.பொ.க அறிவித்திருந்தது.

"தனது தாயகமாகத் தொடர்ச்சியான பகுதி, பொதுவான வரலாற்றுப் பாரம்பரியம், பொதுவான மொழி, கலாச்சாரம், மனவியல் அமைப்பு மற்றும் பொதுவான பொருளாதார வாழ்க்கை ஆகியவற்றைக் கொண்ட இந்திய மக்களின் ஒவ்வொரு பிரிவினரும் அவர்கள் விரும்பினால் பிரிந்து செல்லக்கூடிய உரிமையுடன். சுதந்திர இந்திய ஒன்றியத்திலோ அல்லது கூட்டமைப்பிலோ ஒரு சுயாட்சி மாநிலமாக இருக்கும் உரிமை உடைய தனியான தேசிய இனமாக அங்கீகரிக்கப்படும். "

- என்பதாக இ.பொ.க. 1942ஆம் ஆண்டு செப்டம்பர் நடுவக் குழுத் தீர்மானம் கூறுவதாக (1994- ஆம் ஆண்டு பிப்பிரவரியில் வந்த) 'மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சியின் பெருமைமிகு வரலாறு'- நூலுள் அதன் அப்போதைய பொதுச்செயலர் அர்கிசன் சிங் சுர்சித் கூறியிருக்கிறார்..

ஆனால், மொழி மாநிலங்களின் தேசிய அடையாளத்தைப் பெறுவதற்குக் கூட, அதாவது காசுமீரிகள் தங்களைக் காசுமீரிகள் என்றும், பஞ்சாபியர்கள் தங்களைப் பஞ்சாபியர்கள் என்றும், மலையாளிகள் தங்களை மலையாளிகள் என்றும், தமிழர்கள் தங்களைத் தமிழர்கள் என்றும் பதிந்து கொள்வதற்குக் கூடப் பொதுவுடைமைக் கட்சிகள் கோரிக்கை வைத்ததோ, போராடியதோ இல்லை.. தங்களை இந்தியர்கள் என்று இல்லாத தேசிய அடையாளத்தை இந்திய அதிகார வகுப்பு அனைவர் மீதும் திணித்து வருவதை அவர்கள் எதிர்த்திடவில்லை..

இந்திய அரசியல் சட்டத்தின்படி அனைவரும் இந்தியக் குடி மக்களாக இருக்கமுடியும், ஆனால், இந்தியர் என்பதே அனைவரின் தேசிய அடையாளமாகத் திணிப்பது என்பது எவ்வாறு சரியானதாக இருக்க முடியும்?..

இவ்வாறு, ஒவ்வொரு தேசிய இனத்திற்குமான அடையாளத்திற்கான கோரிக்கையைக் கூட இந்தியப் பொதுவுடைமையர்கள் முன்வைப்பதில்லை.

இந்தியாவிற்குள் உள்ள தேசங்களின் வேறுபாடுகள் மிக அதிகப்படியானவை.. ஐரோப்பாவில் இங்கிலாந்துக்கும், பிரான்சுக்கும் செர்மனிக்கும் பிற நாடுகளுக்கும் இடைப்பட்ட வேறுபாடுகளைவிட இந்தியாவிற்குள் அடக்கப்பட்டுள்ள காசுமீரத்திற்கும், பஞ்சாப்புக்கும், நாகலாந்திற்கும், தமிழ்நாட்டிற்கும் மற்றுமான தேசங்களுக்கும் இடையே அனைத்து நிலைகளிலும் வேறுபாடுகள் அதிகம்..

பல வேறுபட்ட இன மக்களை ஒரே அரசு அதிகாரத்தின் கீழ் அடக்கி வைத்து, அவற்றின் அடையாளங்களை, உரிமைகளை அழித்து வருவது தான் இந்திய அரசின் அதிகாரப் போக்காக இருந்து வரும் நிலையில் இந்தியாவை ஒரு தேசம் என்றோ, ஒரு நாடு என்றோ அடையாளப்படுத்துவதும், ஏற்றுக்கொள்வதும் அதிகாரப் போக்குடையதும் அல்லது அதிகார வகுப்பின் கீழான அடிமைப் போக்குடையதுமே ஆகும்..

இந்த நிலையில், இந்தியாவுக்கென்று பொதுவுடைமைக் கட்சியை உருவாக்கியதே இந்தியாவை ஒரு தேசமாக அல்லது நாடாக ஏற்றுக்கொண்டதே இந்திய அதிகார வகுப்போடு இணைந்து சிந்திக்கிற அடிமை அரசியலாகவே இருக்கிறது..

பிரித்தானிய இந்தியாவில் உள்ளடக்கப்பட்டிருந்த பாகிஸ்தான், நேபாளம் உள்ளிட்ட பல தேச நிலப்பரப்புகளை அன்றைக்கு இந்தியா என்று அடையாளப்படுத்தியிருந்தது இந்திய அதிகார வகுப்பு.. பின்னர் அவையெல்லாம் பிரிந்து போன பிறகும் எஞ்சிய பகுதிகளும், மேலும் பல பகுதிகளும் வன்மையாக இணைக்கப்பெற்று அவற்றை இந்தியா என்று அழைத்தது அதிகார வகுப்பு..

இந்தியப் பொதுவுடைமையர்களும் அதிகார வகுப்புகள் சுட்டிக் காட்டுகிற இந்திய வரைபடத்தையே ஏற்றுக்கொண்டு 1925 தொடங்கி மாறி மாறி அமைந்த இந்திய நிலப்பரப்பை இந்திய அதிகார வகுப்புக்கு இணங்கி இவர்களும் அடையாளப்படுத்தி வருகின்றனர்.. ஆக, தேசம் என்பது எது என அதிகார வகுப்புகள் அடையாளப்படுத்துவதைத்தான் பொதுவுடைமையர்களும் ஏற்றுக்கொள்கிறார்கள் என்றால், பொதுவுடைமையர்களுக்குத் தேசம் பற்றியான அரசியல் மதிப்பீடு இல்லை என்றும், இந்திய அதிகார வகுப்போடு இணைந்து கொண்டு இந்தியாவை ஒரு தேசமாகவே மதிப்பிட்டு வருவதும் வெளிச்சமாகிறது..

இந்தோசீனப் பொதுவுடைமைக் கட்சியில் உள்ளடங்கியிருந்த இலாவோசு, கம்போடியா, வியட்நாம் - ஆகிய தேசங்கள் மீளாய்வு செய்து இலாவோசு பொதுவுடைமைக் கட்சி, வியட்நாம் பொதுவுடைமைக் கட்சி, கம்போடியா பொதுவுடைமைக் கட்சி என்று அமைத்துக் கொண்டு முன்னெடுத்ததன் பிறகு தான், அங்கெல்லாம் புரட்சிவய மாற்றங்கள் உருவெடுத்தன என்பதை வரலாற்றில் பார்க்கிறோம்..

அப்படியான மீளாய்வை இந்தியப் பொதுவுடைமையர்கள் இன்று வரை செய்து கொள்ளவில்லை..

எம்.என்.இராய் தொடங்கி நம்பூதிரிபாடு என எல்லாரும் இந்தியாவை எந்த அளவில் மதிப்பிட்டிருக்கிறார்கள் என்றும், அம் மதிப்பீடுகளில் தேசிய இனங்களின் அடையாளங்களும் உரிமைகளும் எந்த அளவு அடையாளம் இல்லாமல் இருக்கின்றன என்றும் இந்தியப் பொதுவுடைமையர்கள் மீளாய்வு செய்தாக வேண்டும்..

இந்தியக் குமுகம்(சமுகம்) என இந்திய அளவில் ஒரே குமுக(சமுக) அமைப்பு இருப்பதாகவும், இந்தியப் பண்பாடு என ஒரே பண்பாடு இருப்பதாகவும் மதிப்பிடுவதே முதல் பெரும் அரசியல் பிழை.. அப்படியான இந்தியக் குமுகத்தை(சமுகத்தை) ஒற்றைப் பொருளியல் அளவிலும் அவர்களின் மதிப்பீட்டுமுறைதான் மார்க்சியக் கண்ணோட்டம் எனில் அக் கண்ணோட்டம் அதிகார வகுப்பின் பகுப்பாய்வுக் கண்ணோட்டமாகவே இருக்கிறது என்பதையும் இந்தியப் பொதுவுடைமையர்கள் மீளாய்வு செய்தாக வேண்டும்..

அவர்கள் எழுதிய இந்திய வரலாற்று நூல்கள் ஆரியப் பார்ப்பனிய முன்வைப்புகளையே இந்தியாவின் வரலாறு என்றும், வேத புராணங்களின் உள்ளடக்கங்களையே வரலாறாக ஏற்றுக் கொண்ட நிலையிலுமே உள்ளன.

ஏசு.ஏ.டாங்கே எழுதிய **பண்டைய கால இந்தியா** முழுக்க முழுக்க வேதங்களின் வழிப்பட்ட ஆரிய வாழ்வியல் முறைகளையே இந்திய வரலாறாக மதிப்பிடுகிற ஆரியப் பார்ப்பனிய மயக்கம் கொண்டது. குமுக வரலற்றியல் ஆய்வும் எவ்வகையிலும் இல்லாமல் பொய்களையும், பாணினியின் அஷ்டாத்தியாயியையும், கௌடில்யனின் அர்த்தசாத்திரத்தையும் அப்படியே ஏற்றுக் கொண்டதாக எழுதப்பட்டிருக்கிறது.

நம்புதிரிபாடு வின் **இந்திய வரலாறு** ஆரியப் பார்ப்பனியச் சார்புடைய அளவிலேயே இந்தியாவை மதிப்பிடுவதிலும், அதையே **வேதங்களின் நாடு** - என அடையாளப்படுத்தி நூலை உருவாக்கி வெளிப்படுத்தியிருப்பதிலும் இயங்கியல் தன்மையில் வரலாற்றியல் ஆய்வற்றநிலையிலேயே உள்ளன.

மொழி பற்றிய, குறிப்பாகச் சமசுகிருதம் பற்றிய கருத்துகளிலும் இந்தியப் பொதுவுடைமையர்களிடம் இயங்கியல் அறிவியல் பார்வை இல்லை என்பதை அவர்களின் பல நூல்களில் இருந்து அறிய முடிகிறது..

நம்பூதிரிபாடு வெளியிட்ட இந்திய வரலாறு நூலில்,

"இலக்கியத்தின் பல்வேறு துறைகளில் சமஸ்கிருதம் அடைந்த ஒப்பற்ற வளர்ச்சி அதனை இந்தியா முழுவதினுடையக் கலாச்சார வாழ்க்கையின் மையமாக ஆக்கியது. உலகப் புகழ்பெற்ற காளிதாசன் உள்பட ஏராளமான கவிஞர்களும் நாடக ஆசிரியர்களும் அதனை உலகம் முழுவதிலுமுள்ள புகழ்பெற்ற மொழிகளில் ஒன்றாக ஆக்கினர். அந்த மொழிக்கு விஞ்ஞான ரீதியிலான இலக்கணம் இயற்றப்பட்டது. கணிதம், வான சாஸ்திரம், மருத்துவம் முதலிய விஞ்ஞானத் துறைகளிலும் தத்துவச் சிந்தனையின் பல்வேறு துறைகளிலும் ஏராளமான நூல்கள் எழுதப்பட்டன. பாலியை ஒரு இலக்கிய மொழியாக வளர்த்த ஜைன, புத்த மதபோதகர்களும், செந்தமிழை ஒரு இலக்கிய மொழியாக்கியக் கவிஞர்களின் பரம்பரையினரும்கூட இந்தியா முழுவதிற்குமான கலாச்சார மொழியாக(சமஸ்கிருதத்தை) ஏற்றனர்."

- என்ற அவரின் கருத்துகள் எந்த அளவு மொழி பற்றிய, மொழிகளின் எழுத்து, இலக்கணம் பற்றியான, அவற்றின் கால வளர்ச்சி பற்றியானவற்றில் குறைபார்வைவோடு இருக்கின்றன என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.. ஆரியப் பார்ப்பன அதிகார வகுப்பினர் அடையாளப்படுத்தி இருக்கிற பொய் புரட்டுப் பெருமைகளையே இவரும் எடுத்து எழுதியிருப்பது எந்த அளவில் மார்க்சிய இயங்கியல் கண்ணோட்டமாக இருக்க முடியும்..

இத்தகைய ஆய்வுகளை மீளாய்வு செய்யாமல் இருக்கும் வரை இந்தியப் பொதுவுடைமையர்களால் மக்கள் குமுகத்தில் புரட்சிவய மாற்றத்திற்கான செயல் திட்டத்தில் எப்படி முன்னுக்கு நகர முடியும்?..

மொழிவழித் தேசங்களின் விடுதலை

தங்க. குமரவேல்

மொழிவழி மாநிலங்கள் அமைந்த நாளான நவம்பர் 1 ஆம் நாளைத் தாயக நாளாக நாம் கொண்டாடி வருகிறோம் இது குறித்தும் தனித் தமிழ்நாடு குறித்தும் தேசிய இன சிக்கல் குறித்தும் தேசிய இனங்களின் விடுதலை குறித்தும் நாம் மீளாய்வு செய்து நடைமுறைக்கு உகந்த செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய காலமாக இது உள்ளது.

ஆங்கிலேய ஆட்சியில் இருந்து இந்திய ஒன்றியம் 1947 ஆகஸ்ட் 15 விடுதலை பெற்றது. 1950 சனவரி 26 ல் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. இந்தியா விடுதலை அடைந்தபோது 562 சிற்றரசுகள் இருந்தன இவற்றை நிர்வகிக்க எப்படி பிரிப்பது என்ற பிரச்சினை தொடங்கியது. எதன் அடிப்படையில் பிரிப்பது என்று ஆராய்ந்து இந்திய அரசுக்கு தெரிவிக்க தார் கமிசன், ஜே.வி.பி கமிட்டி, பசல் அலி கமிசன் என்று பல கமிசன்கள் உருவாக்கப்பட்டன அவர்கள் தங்கள் அறிக்கைகளை அன்றைய பிரதமர் நேருவிடம் கொடுத்தனர். அவர்கள் அனைவரும் மொழிவழி மாநிலங்கள் இந்தியாவிற்கு ஒத்து வராது என்று கூறினர். ஏற்கனவே இருக்கும் மாகாணங்களை மாநிலங்களாக மாற்றி அமைத்தால் சிக்கல் குறையும் என்று நேரு நினைத்தார். சென்னை, பம்பாய், கல்கத்தா, திருவாங்கூர் என்று இருக்கும் மாகாணங்களை அப்படியே மாநிலங்களாக அறிவித்து விடலாம் என்று முடிவு செய்தார். 1956 சனவரியில் நிர்வாக வசதிக்காக தட்சணப் பிரதேசம், உத்திரபிரதேசம், கிழக்கு பிரதேசம், மேற்கு பிரதேசம் ,மத்திய பிரதேசம் என ஐந்து பெரும் மாநிலங்கள் உருவாக இருப்பதாக நேரு அறிவித்தார். இந்தியாவை மொழி, இன, மத அடிப்படையில் பிரிக்காமல் ஆங்கிலேய காலத்தில் உருவாக்கப்பட்ட அதே மாகாண முறையே தொடரலாம் என்று அறிவித்தார்.

முகமது அலி ஜின்னா பாகிஸ்தான் கேட்டபோது பெரியார் திராவிடநாடு கேட்டார் நேருவின் தட்சணப் பிரதேச அறிவிப்பு பெரியாருக்கு உகந்ததாக இருந்தது.

அதனால் மொழி வழி மாநிலங்கள் அமைவதற்கு பெரியார் எதிராகவே இருந்தார் ராஜாஜி தட்சனை பிரதேசத்தை ஆதரித்தார் சென்னை மாகாணத்தில் முதலமைச்சராக வருவது தமிழரான காமராசரா தெலுங்கரான சஞ்சீவ் ரெட்டியா என்ற போட்டி ஏற்பட்டபோது டெல்லி அரசு தலையிட்டு ராஜாஜியை அறிவித்தது ராஜாஜி ஆதரித்த தட்சணப் பிரதேசத்துக்குத் தென்னிந்திய எங்கும் கடுமையான எதிர்ப்பு கிளம்பியது தமிழ்நாட்டில் தோழர் ஜீவானந்தம், ம.பொ. சிவஞானம் உள்ளிட்ட பலரும் கேரளத்தில் அச்சுத மேனன், ர.கே. கோபாலன் உள்ளிட்ட இடதுசாரிகளும் கடுமையாக எதிர்த்தனர்.

1956 சனவரி 27 ல் ஜீவா, பாரதிதாசன் , சி.பா.ஆதித்தனர், ம.பொ.சி, டி.கே. சண்முகம், பி.டி. இராசன், அறிஞர் அண்ணாதுரை, நெடுஞ்செழியன் உள்ளிட்ட பலர் கூடினர் ஆனந்த தியேட்டர் உரிமையாளர் உமாபதி வீட்டில் கூட்டம் நடந்தது தட்சண பிரதேசத்தை எதிர்த்து மொழிவழி மாநிலங்கள் அமைப்பது மதராஸ் மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயரிட காமராசர் அரசை வலியுறுத்துவது இதை முன் வைத்து தமிழ்நாடு முழுவதும் வேலை நிறுத்தம் கடையடைப்பு செய்வதென்றும் சென்னையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. அதே ஆண்டு பிப்ரவரி 19 மாலை 4:00 மணிக்குத் திருவல்லிக்கேணி தீவு திடலில் தொடங்கிய ஊர்வலம் மவுண்ட் சாலையை நோக்கி வந்த போது போலீசார் நடத்திய தடியடியில் தோழர் ஜீவா , எம்.ஆர்.வெங்கட்ராமன் ஆகிய தோழர்கள் காயம் அடைந்தனர் அடுத்த ஒரே வாரத்தில் தட்சண பிரதேச கொள்கையை நேரு அரசு திரும்ப பெற்றுக் கொண்டது.

தெலுங்கு பேசும் மக்களுக்காக ஆந்திரா என்னும் மொழி வழி மாநிலம் அமைக்க வேண்டி பொட்டி ஸ்ரீ ராமுலு அவர்கள் 1952 அக்டோபர் 19 அன்று உண்ணாவிரத போராட்டத்தைத் தொடங்கி டிசம்பர் 16 அன்று தன் இன்னுயிரை ஈந்தார்: அவர் இறப்புக்குப் பின்பு ஏற்பட்ட மக்கள் போராட்டங்களாலும் கலவரங்களாலும் 1953 அக்டோபர் ஒன்றாம் நாள் கர்னூல் தலைநகராகக் கொண்டு ஆந்திரா மாநிலம் நிறுவப்பட்டது பின்னர் தெலுங்கானா என்று அழைக்கப்படும் ஹைதராபாத் மாநிலத்தில் தெலுங்கு பேசும் மாவட்டங்கள் ஆந்திர மாநிலத்துடன் இணைக்கப் பெற்று ஐதராபாத்தை தலைநகராகக் கொண்ட ஆந்திர பிரதேசம் 1956 அன்று நவம்பர் ஒன்றாம் நாள் ஆந்திர பிரதேசம் அமைக்கப்பட்டது. இந்தியாவில் அமைந்த முதல் மொழி வழி மாநிலம் ஆந்திர பிரதேசம் ஆகும்.

இதே போல 1950 சூலையில் மொழி வழி மாநிலம் அமைக்க வேண்டியும் சென்னை மாகாணத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டியும் சூலை 27 ஆம் நாள் சூலை கரை மேட்டில் உண்ணாவிரதத்தை தொடங்கினார் தியாகி சங்கரலிங்கனார் ஆனால் சங்கரலிங்கனாரின் கோரிக்கைகளை காமராசர் தலைமையிலான காங்கிரஸ் அரசு ஏற்கவில்லை 79 நாட்கள் தொடர் உண்ணாவிரதத்திற்கு பிறகு 1956 அக்டோபர் 13 அன்று தியாகியானார். தியாகி சங்கரலிங்கனாரின் உடல் மதுரை தத்தனேரியில் அடக்கம் செய்யப்பட்டபோது பல கட்சித் தலைவர்கள் கலந்துகொண்டு இறுதி மரியாதை செய்தனர். இறந்த பின் தன் உடலைப் பொதுவுடைமை கட்சியினரிடம் ஒப்படைத்து இறுதி மரியாதை செய்ய வேண்டும் என்று சங்கரலிங்கனார் கூறி இருந்தார். அதன்படி தோழர் கே.டி.கே தங்கமணி கே.பி. ஜானகி அம்மாள் ஆகியோர் மருத்துவமனை பதிவேட்டில் கையொப்பமிட்டு உடலைப் பெற்று மதுரை தத்தனேரி சுடுகாட்டில் தலைவர்கள் புடை சூழ தகனம் செய்தனர். விருதுநகர் கல்லூரி சாலையில் நகராட்சிப் பூங்கா அருகில் தியாகி சங்கரலிங்கனாருக்கு மணிமண்டபம் கட்டப்பட்டுள்ளது.

ஆந்திர மாநில பிரிவினைக்குப்பின் பெரியார் திராவிட நாடு கோரிக்கையை கைவிட்டு தமிழ்நாடு கோரிக்கைக்கு வந்து சேர்ந்தார்.

1962 இல் இந்திய நாடாளுமன்றத்தில் தமிழ்நாடு கோரிக்கைக்காகத் தனி மசோதா தாக்கல் செய்யப்பட்டுத் தள்ளுபடி செய்யப்பட்டது.1964 ஜனவரியில் சென்னை மாகாண சட்டமன்றத்தில் தமிழ்நாடு பெயர் சூட்ட தீர்மானம் கொண்டு வந்தபோது அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. பிறகு 1967 ஏப்ரல் 14 இல் அறிஞர் அண்ணாதுரை தலைமையிலான திமுக ஆட்சியில் சென்னை மாகாணம் தமிழக அரசு என்று மாறியது. அதன் பின் 1968 சூலை 18 இல் சென்னை மாகாணத்தை தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் தீர்மானம் அறிஞர் அண்ணாவால் நிறைவேற்றப்பட்டது.

1968 நவம்பர் 23 இல் தமிழ்நாடு பெயர் மாற்ற மசோதா இந்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.1968 திசம்பர் ஒன்றாம் நாள் தமிழ்நாடு முழுக்க பெயர் மாற்று விழா கொண்டாடப்பட்டுத் தியாகி சங்கரலிங்கனாருக்கு நன்றி செலுத்தப்பட்டது.

இப்படியாக இந்தியாவின் மொழிவழி மாநிலங்கள் பல்வேறு தியாகத் தலைவர்களின் முயற்சியில் உருவாயின தங்களின் மொழிவழித் தேசங்களை இயற்கை வளங்களைச் சுரண்டும் கார்ப்பரேட் நிறுவனங்களிடமிருந்தும் பன்னாட்டு வல்லாதிக்கத்திலிருந்தும் பாதுகாப்பதே இன்றைய தேசக் கடமையாகும்.

மொழிவழி தேசம் என்பது அந்தத்தேசியங்களின் முதலாளியத்தின் நலனிக்கான கோரிக்கையாகும். இரண்டாம் உலகப் போருக்குப் பின் பல மொழிவழி தேசங்கள் உருவாயின அக்காலகட்டத்திற்கு முன் கடந்த 7 ஆயிரம் ஆண்டுகளாகத் தேசம் என்பது மன்னர்களின் ஆளுகை பிரதேசங்களைக் குறித்ததுத் மொழிவழித் தேசங்கள் என்பவை நவீன முதலாளிய வளர்ச்சியின் கட்டமைப்புகளாகும்.

தமிழ் பேசும் நிலப்பரப்பின் பார்வையில் இதைக் காண்போம்

பாரி, ஓரி, காரி, அதியமான், ஆய் உள்ளிட்ட குறு நில மன்னர்கள் ஆண்ட பகுதிகளும் சேர, சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்கள் ஆண்ட தமிழ் நிலப் பகுதிகள் நாடுகளாக வரையறுக்கப்பட்டன. அந்த நாடுகளின் உற்பத்தி முறை நிலவுடைமை உற்பத்தி முறையாக இருந்தது. மன்னர்களுக்குள் ஏற்படும் போர்கள் வாயிலாக அரச வழி நாடுகளின் எல்லைகள் மாற்றத்திற்கு உள்ளாயின. அரசர்கள் வழி தேசங்கள் நிலையற்றதாகவும் மொழிவழித் தேசங்களின் எல்லைகள் நிலையானதாகவும் மாறும்.

மொழிவழித் தேசிய இனங்களின் சிக்கல் என்பது ஒடுக்கும் தேசிய இனம் அல்லது இனங்கள் ஒடுக்கப்படும் தேசிய இனம் அல்லது இனங்கள் என்றும் இரு வகையாக மாறும். ஆனால் இந்த விதியை மீறி இந்திய

ஒன்றியத்தில் ஒடுக்கும் தேசிய இனம் அல்லது இனங்கள் எதுவும் இல்லை அதற்கு மாறாக தாய்மொழி அற்ற மற்றும் தாய்நாடு அற்ற ஆரியப்பார்ப்பனிய கும்பல் இந்தியாவின் அனைத்துத் தேசிய இனங்களையும் அரசியல், பண்பாடு ஆகிய துறைகளில் அடக்கி ஆளுகிறது. பொருளாதார வகையில் பனியா என்று அறியப்படும் குசராத், ராசஸ்தானை சேர்ந்த மார்வாரி கும்பல் அனைத்துத் தேசிய இனங்களின் பொருளாதாரத்தின் மீதும் தனது ஆளுமையைக் கொண்டுள்ளது. சாதியை நிலை நிறுத்தும் ஆரியப்பார்ப்பனக் கும்பலுக்கென்று மொழிவழித் தேசியம் என்று எதுவும் இல்லை. எனவே இந்து, இந்தி, இந்தியா என்ற ஒரு போலியான தேச கட்டமைப்பு அவர்களுக்குத் தேவைப்பட்டது. அதனால்தான் அவர்கள் அகண்ட பாரதத்தை அமைப்பதை முன்னெடுக்கிறார்கள்.

நாம் இந்துத்துவ ஒற்றை இந்தியாவிற்கு எதிராகத் தேசிய இனங்களின் தன்னாட்சி உரிமையை ஆதரிக்கும் ஒன்றிய இந்தியாவை முன்மொழிகிறோம். ஒன்றிய இந்தியாவிலிருந்து தமிழ்நாட்டை மட்டும் பிரிக்கும் தனித்தமிழ்நாடு கோரிக்கை வலிமைமிக்க இந்திய ராணுவத்தை எதிர்கொண்டு வெல்ல வேண்டிய நிலையுடையது.. முறையாக முன்னெடுக்கப்பட வில்லையானால், தமிழ் இன அழிப்பிற்கே வழிவகுக்கும். எனவே தமிழ்நாட்டு விடுதலையை மட்டும் தனித்து முன்னெடுத்து நடத்துவது நடைமுறை சாத்தியமற்றது. அதற்கு மாறாக இந்திய ஒன்றியத்தில் உள்ள மொழிவழித் தேசிய இனங்களும் இந்திய ஒன்றியத்திலிருந்து தங்களுக்கான தேசங்களை விடுவித்து அமைத்துக் கொள்வதற்கான கோரிக்கையும் போராட்டங்களும் வலிமை பெற வேண்டும், ஒரு தேசத்திற்கு இன்னொரு தேசம் துணையாக இருக்கும் போது தான் தனி தமிழ்நாடு சாத்தியமாகும். மொழி வழி மாநிலங்கள் அமைந்த நவம்பர் ஒன்றாம் நாளைத் தாயக நாளாக கொண்டாடும் மொழிவழித் தேசங்களாக இந்திய மாநிலங்கள் என்று அறியப்படும் தேசிய இனங்கள் பல சுய நிர்ணய உரிமை குறித்தும் பிரிந்து செல்லும் உரிமை குறித்தும் புரிதல் அற்றவர்களாகவே உள்ளன. புரட்சியாளர் லெனின் சோசலிச சோவியத் ஒன்றியத்தை அமைத்த போது தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை என்பதை கொள்கையாக கொண்டுதான் பாட்டாளி வர்க்க அரசை நிறுவினார் அவரது தெளிவான புரிதல் இந்தியாவில் இயங்கும் பல்வேறு பொதுவுடைமை இயக்கங்களிடம் இல்லை என்று தான் கூற வேண்டும்.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் இயங்கும் மாவோயியப் புரட்சிகர இயக்கத்தினரிடையே லெனினின் இந்த கோட்பாட்டுப் புரிதல் சரியாக உள்ளது. அவர்கள் தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையை ஆதரிக்கின்றனர் அந்த வகையில் காஷ்மீர் மக்களின் விடுதலை போராட்டத்தையும் அசாம் மக்களின் இன விடுதலைப் போராட்டத்தையும் நாகலாந்து, சிக்கிம், திரிபுரா உள்ளிட்ட தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டத்தையும் ஆதரிக்கின்றனர். JKLF எனப்படும் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி என்னும் அமைப்பின் போராட்டங்களையும் அசாம் விடுதலை இயக்கத்தின் போராட்டங்களையும் நாகலாந்து விடுதலை இயக்கத்தின் போராட்டங்களையும் மாவோயியக் கட்சி வெளிப்படையாக ஆதரிக்கிறது.

அந்த வகையில் மொழிவழி மாநிலங்கள் அமைந்த நவம்பர் ஒன்றாம் நாளைக் கொண்டாடும் நாம் இந்தியாவில் உள்ள பிற தேசிய இன விடுதலைப் போராட்டங்களையும் ஆதரிக்கும் நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் அதன் ஒரு பகுதியாகத் தான் தமிழ்த் தேசமும் அமைய முடியும். மாற்றாக தென் மாநிலங்கள் என்பவை இந்திய ஒன்றியத்தின் முன்னேறிய மாநிலங்களாக உள்ளன. அவை இந்திய ஒன்றியத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டு தனித் தேசங்களாக மாற விரும்பினால் அந்தப் போராட்டங்களையும் ஆதரிக்க நாம் கடமைப்பட்டுள்ளோம். இந்தியாவைப் பொறுத்தவரை விடுதலைக்குப் போராடும் தேசிய இனங்களின் போராட்டங்களோடு நம்மை இணைத்துக் கொள்ளாமல் தனித்தமிழ்நாடு என்பது சாத்திய மற்றது என்பதே உண்மை.

விடுதலையை விரும்பும் இந்திய மொழிவழித் தேசங்களே தேசிய இனங்களின் கூட்டமைப்பாகத் திரள்வோம்!...

தமிழ்நாடு இதழுக்காக அண்மையில் நன்கொடை வழங்கியவர்கள்

திரு. தென்முகநம்பி, சென்னை	1000
தோழர் செங்குட்டுவன், ஆவடி	500
திரு. திருச்சி, சௌந்தரராசன், சென்னை	1000
புலவர் ந, செந்தலை கவுதமன்	1000
மருத்துவர் செயக்குமார், மதுரை	2000
முனைவர் முத்தமிழ், தஞ்சை	500

இந்தியத் தேர்தல் ஆணையம் அதில் இருக்க வேண்டும் நாணயம்?

புதுவைத் தமிழ்நெஞ்சன்

சிறப்புத் தீவிர திருத்தம் - அது
சிக்கல் தருவதால் நிறுத்தம் - என
தில்லி சொல்ல
வேண்டும் இங்கே
உடனே தானே வருத்தம் - அட
உரிமை மீட்பதே பொறுத்தம்!

இருப்பதை இல்லா தாக்கும் - இந்திய
தேர்தல் ஆணையம் நீக்கும் - முதலில்
இருப்பதில் என்ன
தவறு என்று
உடனே அறிவு கேட்கும் - தன்
உரிமை தன்னை மீட்கும்!

இந்தியா நாடே இல்லை - அது
இங்கே தருவதோ தொல்லை - தமிழர்
முந்தி வாழ்ந்த
மூத்த குடிகள்
என்பதை மறப்பதற் கில்லை - நீ
எழுந்தால் தமிழ்நிலம் எல்லை!

இந்திய தேர்தல் ஆணையம் - அதில்
இருக்கிறதா சொல் நாணயம் ? - அட
இருக்கும் பேர்களை
இங்கே பதிய
இன்னல் தருவதே வீணயம் - நீ
இமையைத் திறந்தால் வானயம்!

கழிவுமீன் நிறுவனங்கள் செய்யும் தொடர் அட்டூழியம்

பொட்டலூரணி ஊரைச் சுற்றியுள்ள துர்நாற்றம் வீசும் கழிவுமீன் நிறுவனங்களை மூடச் சொல்லி பொட்டலூரணி மக்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். இந்த நிலையில் கேரளாவில் இருந்து பொட்டலூரணி விலக்கில் உள்ள ழிறிவி என்ற கழிவுமீன்களை ஏற்றி வந்த லாரி, சரக்கை இறக்கிவிட்டுப் பொட்டலூரணி ஊருக்குள் வந்தது. கேரளாவிற்குத் திரும்பிச் செல்ல வேண்டிய லாரி பொட்டலூரணி ஊருக்குள் சம்பந்தமே இல்லாமல் வந்தது. இதைப் பார்த்ததும் ஊர்மக்கள் திகைத்து நின்றனர். அண்மையில் தான் சாலை மறியல் போராட்டம் தொடர்பான வழக்கில் 17 நாள்கள் சிறை முடித்து மக்கள் வந்தனர். அதற்குள் மீண்டும் கழிவுமீன் வண்டியைத் திட்டமிட்டே நிறுவனத்தினரும் அரசும் சேர்ந்து ஊருக்குள் விட்டுள்ளனர் என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். மக்கள் சிறைப்படுத்தப்பட்ட பின்னர் ஒடுங்கி அஞ்சி விட்டனரா? மீண்டும் போராடுவார்களா? என்று மக்களைச் சோதிப்பதற்காக இந்த வண்டி விடப்பட்டதாகவே கருதுகின்றனர். இது தொடர்பாக லாரி ஓட்டுநரிடம் கேட்டால், ஒரு முறை வண்டியையும் வண்டியிலுள்ள கழிவுமீன் பிசுறுகளையும், ட்ரேவையும் கழுவ வந்ததாகக் கூறினார். பிறகு கொஞ்ச நேரம் கழித்ததும் கூகுள் மேப் தவறாகக் காட்டியதாகக் கூறினார். இது குறித்துப் புதுக்கோட்டை காவல் ஆய்வாளரிடம் பேசியபோது வண்டியை அனுப்பிவிட்டுப் புகார் கொடுக்க வருமாறு கூறினார். ஊர்ப் பொதுமக்கள் புகார் தருகிறோம் மனுரசீதைத் தந்ததும் வண்டியை விடுகிறோம்; பிறகு முதல் தகவலளிக்கை நகல் தாருங்கள் என்றனர். ஆய்வாளரோ, என்மீது நம்பிக்கை இல்லையா வண்டியை விட்டுவிட்டு நிலையத்திற்கு வந்து புகார் தாருங்கள். தருகிறேன் என்றார். அவர் கூறியவாறே வண்டியை விட்டுவிட்டு நிலையத்திற்குப் புகார் கொடுக்கச் சென்றோம். மாலை வாருங்கள் மனு ரசீது போடணுமா? எப்.ஐ.ஆர் போடணுமான்னு மேல கேட்டுட்டு சொல்கிறேன் என்றார். அத்தோடு நிற்கிறது.

தொல்லியல் ஆய்வாளர்
அமர்நாத் இராமக்கிருட்டிணன்

கண. குறிஞ்சி
புதுமலர் ஆசிரியர்

'புதுமலர்' இதழ் நேர்காணலில் ஒரு பகுதி..

தொல்லியல் ஆய்வாளர் என்ற முறையில் தமிழின் தொன்மை குறித்த உங்கள் கருத்தைப் பதிவு செய்யவும்.

குரங்கிலிருந்து மனிதனாக மாற 45 இலட்சம் ஆண்டுகள் ஆயின. அதிலும் குறிப்பாக நிமிர்ந்த மனிதனாக (Hotto erectus) வடிவெடுக்கப் பற்பல ஆண்டுகள் ஆகியுள்ளது. தமிழகத்தைப் பொறுத்தவரை 15 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பே மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். அத்திரப்பாக்கம், குடியம் மற்றும் பல்லாவரம் போன்ற பகுதிகளில் இதற்கான திணைக் கோட்பாட்டுப்படி ஊர் அமைப்பு மற்றும் அரசு ஆதாரங்கள் உள்ளன. பெருங்கற்காலக் காலத்திலேயே ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனிதரிடம் காணப்படும் வி 130 அமைப்பு தமிழகத்தில் சிறப்பாக அமைந்திருக்கிறது. 70,000 எனும் மரபணு. மதுரை மாவட்டம் உசிலம்பட்டியைச் சார்ந்த சோதி மாணிக்கம் எனும் ஊரிலுள்ள விருமாண்டி என்பவரிடம் இருப்பதைக் கண்டறிந்துள்ளனர்.

மனிதன் முதன்முதல் ஆப்பிரிக்காவில் தோன்றி அங்கிருந்து வெளியேறிய மனிதரிடம்தான் இத்தகைய மரபணு காணப்பட்டுள்ளது. இது மரபணு சோதனை (DNA) மூலம் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், மத்திய ஆசியா மைனர் பகுதி அனடோலியாவில்தான் முதன் முதலில் இரும்பு கண்டுபிடிக்கப்பட்டதாக இதுவரை அனைவரும் நம்பினர். ஆனால் தமிழகத்தில் மயிலாடும்பாறை பகுதியில் கி.மு.2142-இல் இரும்பு முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. இப்பொழுது இது உறுதி செய்யப்பட்டுள்ளது. அத்தோடு அல்லாமல் அண்மையில் சிவகளை ஆய்வு, இரும்புக் காலத்தை மேலும் பின்னுக்கு நகர்த்தி சுமார் கி.மு. 3300 ஆண்டுவாக்கில் தமிழகத்தில் இரும்பு பயன்படுத்தப்பட்டது என்ற செய்தியை எடுத்துச் சொல்கிறது.

மேலும் தமிழியிலிருந்து உருவாக்கப்பட்டதுதான் பிராமி என்னும் எழுத்து வடிவம். ஏனெனில் முதன்முதலில் எழுத்துகள் உருவாக்கிய பகுதி தமிழகம். அசோகரது காலத்திற்கு முன்பே தமிழி உருவாகி இருந்தது. *பொதுவாக அசோகரது பிராமி எழுத்துகளுக்குப் பிறகுதான் தமிழ் பிராமி உருவாகியிருக்கும் எனும் கருத்து தவறானது என்பது அண்மைக்கால ஆய்வுகள் எடுத்துக் கூறக்கூடிய செய்தியாகும்.*

மேலும் அசோகரது கல்வெட்டுகள் அரசு ஆணைகளைத் தெரிவிப்பனவாக இருந்தன. அந்த சாசனக் கல்வெட்டுகள் வளர்ச்சி அடைந்த எழுத்துகளாக உள்ளன. அதில் தவறுகள் இருக்காது. ஆனால் கீழடியின் அடிப்பகுதியில் இருப்பது கீறல் எழுத்துகளாக உள்ளன. சாதாரணக் குடிமக்களும் தங்களது பெயர்களைக் குறிப்பிடுவதால், அதில் சில பிழைகள் உள்ளன. மேலும் எழுத்துப் பயிற்சி நடைபெற்றுள்ள கீழடியின் மேல் பகுதியில் தெளிவான எழுத்துகள் உள்ளன. 1,600 எழுத்துப் பொறிப்புகள் தமிழகத்தில் இதுவரை கண்டறியப்பட்டுள்ளன.

மேலும், சமசுக்கிருதத்தைவிடத் தமிழ் தொன்மை மிக்கது. கி.பி. ஒன்றாம் நூற்றாண்டில்தான் முதல் சமஸ்கிருதக் கல்வெட்டு கிடைத்துள்ளது. இராஜஸ்தானிலுள்ள அத்திபாரா என்ற இடத்தில் கிடைத்த கல்வெட்டே சமஸ்கிருதத்தின் முதல் கல்வெட்டாகும். தவிரவும், சமஸ்கிருதத்தை ஆண்கள் மட்டுமே பேச முடியும். எனவே அது தந்தை மகன் மொழி என அழைக்கப்படுகிறது. ஆனால், தமிழ் அப்படிப்பட்டதல்ல!

அதே போல், இந்தியாவில் தங்கக் கட்டியின் மீது தமிழி அல்லது தமிழ்பிராமி எழுத்துகள் எழுதப்பட்ட பொறிப்புகள் மகரைக்கு அருகிலுள்ள தேனூரில் கிடைத்துள்ளன. கோதை எனும் தமிழ் பிராமி எழுத்துப் பொறிக்கப்பட்ட ஏழு தங்கக் கட்டிகள் தமிழகத்தில்தான் கிடைத்துள்ளன.

இராமர் பாலம், சரசுவதி நாகரிகம், மகாபாரத காலம் ஆகியன குறித்த உங்களது பார்வையைப் பதிவிடவும்.

இந்திய வரலாற்றை ஆரியம் / திராவிடம் என்ற நோக்கில் அணுகக் கூடாது என அண்மைக் காலத்தில் அறிவுரை கூறப்படுகிறது. ஆனால் இந்திய வரலாறு என்பது பன்முகத்தன்மை கொண்டது. அந்தப் பன்முகத் தன்மையை நாம் அங்கீகரிக்க வேண்டும். எனவே தொன்மை வரலாற்றை இந்திய நோக்கு என ஒற்றைமயப்படுத்தி அனுகுவது என்பது ஏற்கத் தக்கதல்ல!

நமக்கு வரலாற்றை முதன்முதல் சுற்றுக் கொடுத்தவர்கள் முஸ்லீம் அரசர்கள்தாம். அந்த அரசர்களின் சுயசரிதைகள்தாம். இந்தியாவில் முதல் வரலாற்றுப் பதிவாக உள்ளது.

அதேபோல் கல் இராஜதரங்கினி என்ற நூல் ஒரு காஷ்மீரத்து வரலாற்று நூலாகக் கருதப்படுகிறது.

அதற்கு முன்னர் நம்மிடம் வேதங்கள், புராணங்கள், உபநிடதங்கள் ஆகியவைதாம் இருந்தன. பிறகு ஆங்கிலேயர்கள் நமக்கு வரலாற்று உணர்வைக் கற்பித்தனர்.

மகாபாரதம் என்பது கதைதான். அதை மெய்ப்பிப்பதற்கான தொல்லியல் எச்சங்கள் ஏதும் நம்மிடம் இல்லை. அதே போல் 300 வகையான இராமாயணங்கள் நம்மிடம் உள்ளன. ஆனால் அதற்கான தொல்லியல் சான்றுகள் ஏதும் நம்மிடம் இல்லை. எனவே அறிவியல் கண்ணோட்ட அடிப்படையில் மகாபாரதத்தையும், இராமாயணத்தையும் ஆய்வு செய்தால், நமக்கு. ஏமாற்றம்தான் எஞ்சும்.

அதே போல் இராமர் பாலம் என்ற ஒன்று இல்லை. முன்பு இந்தியாவும் இலங்கையும் புவியியல் அடிப்படையில் ஒன்றாக இணைந்திருந்தன. பிறகு அவற்றுக்கு இடையில் தண்ணீர் புகுந்ததால், அவை இரண்டு பகுதிகளாகப் பிரிந்தன. எனவே இராமர் பாலம் எனக் குறிப்பிடும் பகுதியில் இப்பொழுது ஒரு மணல்திட்டு மட்டுந்தான் உள்ளது.

அயோத்தியிலும். அதே நிலைதான். அங்கே கி.பி. ஒன்பது / பத்தாம் நூற்றாண்டில் ஒரு கோயில் இருந்ததாக ஆய்வாளர் கே.கே. முகமது அவர்கள் குறிப்பிட்டார். ஆனால் அது இராமர் கோயில்தான் எனக் கூற முடியாது என்றே அவர் எடுத்துரைத்தார். மேலும் அதுதான் இராமனின் பிறப்பிடம் என்றும் சொல்ல முடியாது. இராமனின் பிறப்பு என்பது ஒரு நம்பிக்கை. நம்பிக்கை எல்லாம் வரலாறு ஆகாது.

குப்தர் காலத்திற்கு முன்பு இந்தியாவில் இருந்தவை சமணம் மற்றும் பௌத்த மதங்கள் மட்டுமே.

அப்பொழுது இந்து மதம் என ஒன்று இல்லை. அது வைதீக மதம் என்று அழைக்கப்பட்டது. குப்தர் காலத்தில்தான் வைதீக மதம் மீண்டும் தழைக்கத் தொடங்கியது.

குறிப்பாக உத்தரப் பிரதேசம் மற்றும் பீகாரில் பர7ந்த அளவில் சமண பௌத்த மதங்கள்தான் நிலை பெற்றிருந்தன. அவற்றின் எச்சங்களை நாம் அங்குக் காண முடியும்.

சிந்து சமவெளி நாகரிகத்தின் பிற்பகுதியில் சனோலி எனும் இடத்தில் ஒரு தேர் இருந்தது கண்டறியப் பட்டது. அதை மகாபாரதத்துடன் இணைக்கும் முயற்சிகள் நடந்தன. ஆனால் அதற்கான தரவுகள் கிடைக்கவில்லை. மேலும், வீடுகளிலிருந்த அடுப்புகளை யாகக் குண்டங்கள் எனக் கட்டமைக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அறிவியல் வழியிலான ஆதாரங்கள் அவற்றை மறுத்தன.

சிந்துவெளிப் பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் அகழாய்வுகள் நடத்தப்பட்டன. அங்குப் புதைப்பிடங்கள் அதிகம் இருந்தன. ஆனால் ஆரிய நாகரிகத்தில் புதைக்கும் வழக்கம் இருக்கவில்லை. சிந்து வெளி குறித்து ஆய்வு செய்த சர்.ஜான் மார்சல் அவர்கள், அது ஒரு திராவிட நாகரிகம் என 1924- ல் அறிவித்தார். ஆதித்தென் இந்தியப் பழங்குடி மக்களும் (Ancient) Ancestral South Indian) மற்றும் ஈரானிய விவசாயக் குடிமக்களும் (Iranian Farmers) இணைந்து உருவாக்கியதுதான் சிந்து

வெளி நாகரிகம் எனவும் அறிவிக்கப்பட்டது.

பல ஆண்டுகளுக்குப் பிறகு அரப்பாவைப் போன்ற நாகரிகம் கீழடியில் இருப்பதாக 2016 மே 26 ஆம் நாளன்று The Times of India நாளிதழில் முதன்முதலாக அறிவிப்பு வெளியானது. அதுதான் கீழடியை வட இந்தியாவிற்கு அறிமுகப்படுத்திய செய்தியாகும். இந்தக் கட்டுரையின் மூலம்தான் கீழடியைப் பற்றிய செய்திகள் உலக மக்கள் அனைவருக்கும் பரவியது. வட இந்தியாவில் சிந்துவெளிப் பண்பாட்டின் இடம் கிடைத்து விட்டது என்று நினைத்துக் கொண்டார்கள். ஆனால் உண்மையில் கீழடி என்பது சிந்துவெளி நாகரிகத்தின் தொடர்ச்சி என்பதை அண்மைக்கால ஆய்வுகள் உறுதிப்படுத்தி வருகின்றன. இதற்கு எதிர்வாதம் செய்வதற்குத்தான் வட இந்தியாவில் சரசுவதி நாகரிகம் என்ற ஒரு கட்டுக் கதையை அவிழ்த்து விட்டுள்ளனர். இராஜஸ்தானில் கக்ரா (Ghaggara) மற்றும் ஹக்ரா (Hakra) என்ற ஆற்றுப் படுகைகளைச் சரசுவதி நதி நாகரிகம் என்று அழைக்கத் தொடங்கி உள்ளனர். குறிப்பாக இந்த நதிப் படுகைகளில் சிந்துவெளி நாகரிகத்தின் தொல் இடங்கள்தாம் கிடைக்கின்றன. எவ்வாறு சிந்துவெளி வெளி நாகரிகத்தில் குதிரை இருந்தது என்று கதை கட்டினரோ, அதேபோல் இருக்கின்ற சிந்துவெளி நாகரிக இடங்களைச் சரசுவதி நாகரிகம் என்று பெயர் மாற்றம் செய்கின்றனர். ஆனால் ஆய்வுகள் அதற்கு மாறாக ஆதாரங்களை எடுத்துச் சொல்கின்றன. அவர்கள் அண்மையில் கண்டுபிடித்ததாகச் சொல்கின்ற இடம் பழுப்பு நிறப் பானைப் பண்பாட்டை (PGW - Painted Grey Ware) சார்ந்த இடமாகும்.

கீழடி அகழாய்வு அறிக்கையைத் திருத்தி அமைக்க இந்தியத் தொல்லியல் துறை உங்களிடம் கோரியுள்ளது குறித்து உங்களது கருத்து யாது?

கீழடி ஆய்வில் திருத்தம் செய்ய வேண்டும் என என்னிடம் அறிக்கை ஏதும் வழங்கப்படவில்லை. அது குறித்து ஒரு கடிதம் மட்டுமே எனக்கு வந்தது. எந்த ஓர் அகழாய்வு முடிவு குறித்தும் அதைத் தோண்டி ஆய்வு செய்தவர்தான் முழுமையாகச் சொல்ல முடியும். கீழடியைத் தோண்டியவன் நான். எனவே அதன் உண்மை நிலை என்ன /அதன் காலம் என்ன என்பதை நான் நன்கு அறிவேன். கீழடியின் காலம் கி.மு. 800 வரை நீள்கிறது என்பது எனது ஆய்வு முடிவு. ஆனால் இந்தியத் தொல்லியல் ஆய்வுத்துறை அதன் காலம் கி.மு.300 வரைதான் எனக் குறிப்பிடுமாறு தெரிவித்தனர். நான் அதை ஏற்க முடியாது எனத் தீர்மானமாகத் தெரிவித்து விட்டேன்

ஏனெனில் கி.மு.800 எனும் தொன்மை ஏற்கப்பட்டால் வட இந்திய கங்கை சமவெளி நாகரிகங்களுக்கு முந்திய நாகரிகம் தமிழ் நாகரிகம் என்பதாக ஆகிவிடும் எனவேதான் கீழடியை ஆய்வு செய்யாத, கீழடியைக் கண்ணால் கூடப் பார்க்காத அறிஞர்கள் அறிவியலுக்குப் புறம்பாக எனது அறிக்கையைத் திருத்துமாறு கூறுகின்றனர். எனது கருத்துகளை விமர்சனம் செய்வதை நான் என்றும் ஏற்றுக்கொள்ளக் கூடியவன். ஆனால் தகுந்த தரவுகள் இல்லாமல் கூறும் கருத்துகளை ஏற்கமுடியாது. எனது கருத்தை மறுக்க நினைத்தால், தாராளமாக அவர்கள் கீழடிக்கு வந்து மீண்டும் அகழாய்வு செய்து அதன் அடிப்படையில் அவர்கள் தங்களது கருத்தை நிரூபிக்குமாறு நான் வேண்டுகிறேன்.

கீழடி குறித்துத் தமிழ்நாட்டு அரசுக்கும், அரசியல் இயக்கங்களுக்கும் நீங்கள் கூற விரும்புவது என்ன?

இந்தியத் தொல்லியல் துறை 2017 - ஆம் ஆண்டில் கீழடி ஆய்வைக் கைவிட்ட பின் தமிழக அரசின் தொல்லியல் துறை தனது பொறுப்பில் அகழாய்வைச் சிறப்புறத் தொடர்ந்து வருவது பாராட்டிற்குரியது. ஆனால் தொடர் ஆய்வுகளின் அறிக்கைகளை வெளியிடத் தமிழக அரசு தொய்வுறாமல் முன்முயற்சி எடுக்க வேண்டும். அறிஞர்களும், அரசியல் இயக்கங்களும் கீழடியைப் பற்றிய செய்திகளை மக்களிடம் கொண்டு சென்று, மக்களிடையே. பேசு பொருளாக்கி, அதை வலிமையான மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும். அதன் மூலம்தான் தமிழரின் தொன்மையை நிலைநிறுத்த முடியும்.

- புதுமலர் - நவம். 2025

சிவனிய சமயம் என்பது ஆரிய சமயமா? சனாதனத்தை வளர்ப்பதுதான் சிவனிய மடங்களின் கடமையா?

மறைமலை அடிகளார், குன்றக்குடி அடிகளார், பேரூர் சாந்தலிங்க அடிகளார் போன்றோர் தமிழர்களின் நெஞ்சங்களில் நிற்கிறார்கள்.. தமிழ் மீட்பு வரலாற்றில் இடம்பெற்றிருக்கிறார்கள்.. ஆனால் வேறு எந்த மடங்களின் ஆதீனங்களும் வரலாற்றில் மக்களிடம் அறியப்பட்டிருக்கிறார்களா?

மயிலாடுதுறையில் நவம்பர் 1 முதல் பத்து வரை நடைபெறுகிற தருமபுரம் ஆதீனத்தின் மணி விழா மாநாட்டின் நிகழ்ச்சிகள் முழுக்க முழுக்க ஆரியச் சார்புடையனவாகவே நடைபெறுகின்றன..

மாநாட்டின் இரண்டாம் நாள் கலந்து கொண்ட ஆளுநர் ஆர் என் இரவி கலந்து கொண்டார்..

இந்திய அரசின் அதிகாரத்தில் இருக்கிறார் என்பதைக் கடந்து அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கு அவருக்கு எந்தத் தகுதியும் இல்லை.. அவர் சிவனியரும் அல்லர்; தமிழ் உணர்வினரும் அல்லர்..

திருஞானசம்பந்தர் அவர்களால் தொடங்கப்பட்ட தருமபுரம் ஆதீனமடம் சிவனியத்தை வளர்ப்பதற்காகத் தொடங்கப்பட்டது.. சனாதனத்தோடு எவ்வகைத் தொடர்புமுமற்றது..

அதன் கட்டுப்பாட்டில் ஏறத்தாழ 20 கோயில்கள் உள்ளன..40 பள்ளிக்கூடங்கள் இயங்குகின்றன..

பெரும்பாலான கோயில்களுக்குத் தமிழில் பெயர் இல்லை..

சிவலோகத்தியாகர் கோயில், வைத்தீஸ்வரன்கோயில், மகாலட்சுமீசர் கோயில், வீரட்டேசுவரர் கோயில், உத்தவேதீசுவரர் திருக்கோயில், உசிரவனேசுவரர் கோயில், அமிர்தகடேசுவரர் கோயில், அருணஷடேசுவரர் கோயில், உஜ்ஜீவநாதர் கோயில, கைலாசநாதர் ஆலயம், பிரம்மபுரீஸ்வரர் கோயில், தர்ப்பாரண்யேசுவரர் கோயில் போன்றவை தமிழ்ப் பெயரற்ற கோயில்கள்

அங்கு நடைபெறுகிற பூசைகளின் பெயர்களைப் பாருங்கள்:

கோ பூஷை, ஸ்ரீ அஷ்டதசபுஷ துர்க்கை அபிஜேகம், கஷ பூஷை, அஸ்வ பூஷை, அஷபூஷை பஞ்ச கல்யாணி பூஷை போன்றவை நடைபெறுகின்றனவாம்..

வேதப்பாராயணம், திருமுறை முற்றோதல் இரண்டும் நடத்தப்பெறுகின்றன..

இந்நிலையில், சிவனியமும் வைதீகக் கருத்துடைய சனாதனமும் ஒன்றுதான் என்று சிவனிய மூலவர்கள் எவரும் சொல்லியதில்லை..

ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய் - என்பதற்கு நீ ஆரியனாய் இருக்கின்றாய் நீ தமிழனாகவும் இருக்கின்றாய் என்று சுனித் குமார் சட்டர்ஜி உள்ளிட்டோர் பொருள் திரித்து உரைத்ததைப் பாவாணர் அவர்கள் "அவன் ஆரியன் காண்; அவன் தமிழன் காண் என்று படர்க்கைக் கூற்றுகளேயன்றி, முன்னிலைக் கூற்றுகளல்ல" என்று விளக்குவார்..

மாணிக்கவாசகர் காட்டுகிற விளக்கங்களையெல்லாம் மறைமலையடிகள் மிகவும் விரிவாகவே எடுத்துரைப்பார்..

சிவனியம் இந்து மதத்திற்குச் சிறிதும் தொடர்பற்றது; சிவனியர்கள் இந்துக்கள் அல்லர் என்பதை மறைமலையடிகளாரும், குன்றக்குடி அடிகளாரும், பேரூர் சாந்தலிங்கம் அடிகளாரும் படித்துப் படித்து சிவனியர்களுக்கு எடுத்து விளக்கியிருக்கின்றனர்..

ஆனால், தருமபுரம் ஆதீனம் சிவனிய சமயப் பெருமக்களின் வழிகாட்டல்களை ஏற்றுக் கொண்டதுபோல் தெரியவில்லை..

சனாதனம் வருணாச்சரமத்தை வலியுறுத்துவது..

சிவனியம் வருணாச்சரமத்தை ஏற்பதில்லை..

ஆனால், தருமபுரம் ஆதினங்களின் சாதிய நடைமுறை கடைபிடியோ வருணாச்சிரமம் போன்றது..

பாவாணர் அவர்களே தன் வாழ்வில் சிவனிய மடங்களில் சாதிய நிலையில் பட்டபாடுகளை எழுதியுள்ளார்..

ஆக, சிவனிய(சைவ)ர்கள் தமிழ் உணர்வோடும், பொதுமை அற உணர்வோடும் இருக்க வேண்டும் என்பதற்காகவே இவற்றை எழுத நேர்ந்தது..

ஆரியத்தாலும், சமசுக்கிருதத்தாலும் தமிழ்நாடும் தமிழும் எந்த அளவு அடிமைப்பட்டுப் போயிருக்கிறது என்பதையும், அவற்றை மீட்க மறைமலை அடிகளாரும், குன்றக்குடி அடிகளாரும், சாந்தலிங்க அடிகளாரும் எந்த வகையில் எல்லாம் பாடாற்றினர் எனத் தங்களுக்குச் சான்றாளர்களாக எண்ணிச் செயல்பட வேண்டும் என வலியுறுத்துகிறோம்..

- பொழிலன்

நுண்(இசட்) தலைமுறையே எழு ! அமைப்பாகு ! புரட்சி செய் !!

– க. இரா. தமிழரசன் தமிழ்த் தேசக் குடியரசு இயக்கம்

வாக்குத் திருட்டு தொடர்பாக நவம்பர் முதல் கிழமை நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் இராகுல் காந்தி, " இந்தியாவில் இளைஞர்களிடம்தாம் உண்மை மற்றும் அகிம்சையின் அடிப்படையில் சனநாயகத்தை மீட்டெடுக்கும் ஆற்றல் இருப்பதாகவும், நமது நாட்டை மீண்டும் உண்மை, ஞாயம், சமத்துவம் ஆகியவற்றின் பாதைக்குத் திருப்புவது இளைஞர்களின் பொறுப்பு என்றும் உங்கள் குரல் தான் சனநாயகத்தின் உயிர்" என்றும் பேசினார்.

அவர் இளைஞர்கள் என்று குறிப்பிட்டுப் பேசியது 'இசட்' தலைமுறை பற்றியே. இன்று உலகம் முழுக்க இந்த இசட் தலைமுறை (Generation Z) பற்றிய பேச்சு தான் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக உச்சரிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில்கூட, பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி, நேபாளத்தில் 'ஷென் இசட்' தலைமுறையினர் நடத்திய புரட்சியைப் போல தமிழகத்தில் திமுக ஆட்சியை அகற்ற இளைஞர்கள் புரட்சி செய்ய வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார்.

த.வெ.க ஆதவ் அர்ஷுனாவோ "இளைஞர்களும், ஷென் இசட் தலைமுறையும் ஒன்றாய்க் கூடி நேபாளத்தில் அதிகாரத்திற்கு எதிரானப் புரட்சியை உருவாக்கிக் காட்டினார்களோ அதே போல இங்கும் இளைஞர்களின் எழுச்சி நிகழும் என்று பேசுகிறார்.

இப்படி எல்லோரோடும் பேசப்படுகிற இந்த நுண் (இசட்) தலைமுறை எது ? ஏன் இவர்கள் முக்கியத்துவம் பெறுகிறார்கள் என்பதைப் பார்ப்போம்.

மனித தலைமுறைகளை ஆண்டு வாரியாக பிரித்து வகுப்பது ஒரு முறையாகும். அப்படி, 1995 ஆம் ஆண்டிற்கும் 2012 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் பிறந்தவர்களை "இசட்" தலைமுறையினர் என வகைப்படுத்துகின்றனர். இத்தலைமுறைக்கு முன்னர் பிறந்தவர்களை ஒய் தலைமுறையினர் என்றும், இத்தலைமுறைக்குப் பின் பிறந்தவர்களை ஆல்பா தலைமுறையினர் என்றும் அழைக்கின்றனர்.

இவர்களை, சூம் (zoom) (தலைமுறையின் வாழ்க்கையின் வேகம் மற்றும் வேகத்திற்காக) மற்றும் பூமர் (boomer) (அவர்களுக்கு முந்தைய தலைமுறை) ஆகிய சொற்களை இணைத்து சூமர்கள் என்கிறார்கள். இது சுருக்கமாக இசட் (Z) என்று குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. ஷெனரேசன் என்பது ஜெ ன் (GEN) என்று சுருக்கப்பட்டு ஷென் இசட் (Gen - Z) என்ற சொல்லால் இவர்கள் அழைக்கப்படுகின்றார்கள்.

இந்த தலைமுறையினர் மின்னணுமயமான உலகில், இணையம் மற்றும் திறன் பேசி(ஸ்மார்ட்போன்)களோடு வளர்ந்தவர்கள். முகநூல், கீச்சகம்(டிவிட்டர்), புவனம்(வாட்ஸ் அப்) உள்ளிட்ட சமூக ஊடகங்கள் அவர்களது உயிர் துடிப்பான இயக்கமாக உள்ளன.

இவற்றின் மூலம் தங்கள் அரசியல் உள்வாங்குதல்/ வெளிப்படுத்துதலை நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

தற்போது, இந்த இசட் தலைமுறையினர்தான் தங்கள் நாடுகளில் நிலவும் வறுமை, வேலையின்மை, ஊழல் ஆட்சி போன்றவற்றிற்கு எதிராக இலக்கக்கணக்கில் ஒன்று திரண்டு அரசுக்கு எதிரான போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நேபாளம்

நேபாளத்தில், இளம் போராட்டக்காரர்கள் தங்கள் நாட்டு அரசாங்கத்தையே கவிழ்த்ததை நாமறிவோம். வறுமை, வேலையில்லாத் திண்டாட்டத்தின் காரணமாக இளைஞர்கள் உள்ளம் எரிந்து கொண்டிருந்தது. செப்டம்பர் 4, 2025 அன்று நேபாள அரசு படவரியம்(இன்ஸ்டாகிராம்), முகநூல் போன்ற சமூக ஊடகத் தளங்களுக்கு “ஒழுங்குமுறை” என்ற பெயரில் திடீர் தடை விதித்தது.

இந்தத் தடையானது உள்ளுக்குள் எரிந்து கொண்டிருந்த சினத்தைத் தெருவில் இறக்கியது. நுண் (இசட்) தலைமுறை இளைஞர்கள் நேபாளத் தலைநகர் காத்மாண்டு உட்பட வீதிகளில் இறங்கினர். ஆட்சி மாற்றத்தையே உருவாக்கிவிட்டனர்.

(இந்தப் போராட்டத்தின் பின்னணியில் அமெரிக்க மில்லீனியம் சேலஞ்ச் கார்ப்பரேசன் (விசிசி) மற்றும் அமெரிக்காவின் சனநாயகத்திற்கான தேசிய அமைப்பிடம்(National Endowment for Democracy) நிதியுதவி பெறும் ஹமி நேபாள் (Hami Nepal) போன்ற அமைப்புகள் பின்னணியில் இருந்தது வேறு செய்தி.

வங்கதேசம்

2024- இல் வங்கதேசத்தில் நடந்த அடக்குமுறையை இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகக் கூறலாம் . வங்கதேசத்தின் 17 கோடி மக்களில் பெரும்பாலோனார் வேலைவாய்ப்பு இல்லாமல் உள்ளனர்.

அரசு கொண்டு வரும் திட்டங்கள் பணக்காரர்களுக்கு மட்டுமே பயனுள்ளதாக இருக்கிறது என்று கூறி இளைஞர்கள் போராட்டத்தில் இறங்கினர்.

போராட்டக்காரர்கள் ஒன்றுகூடுவதைத் தடுக்க, நாடு தழுவிய ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்டது, நாட்டின் சில பகுதிகளில் இணைய இணைப்பு மீண்டும் துண்டிக்கப்பட்டது. அவாமி லீக் அரசு இணையத்தை முடக்கியது, டிஜிட்டல் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் எதிர்ப்பாளர்களைக் கைது செய்தது. மாணவ ஆர்வலர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியது. இது மக்களுக்கு மேலும் சினத்தை உருவாக்கியது. இதன் விளைவாக மக்கள் போராட்டத்தின் புதிய அலை உருவானது. இறுதியாக வங்கதேசத் தலைமை அமைச்சர் தப்பி ஓட வேண்டியதாகி விட்டது.

மொரோக்கோ

மொராக்கோவில் இளைஞர்கள் தலைமையிலான தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்கள் செப்டம்பர் 27, 2025 அன்று தொடங்கின. ஷென் இசட் 212 மற்றும் மொராக்கோ யூத் வாய்ஸ் எனப்படும் பரவலாக்கப்பட்ட, பெயர் குறிப்பிடப்படாத கூட்டு அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டங்களில், பொதுக் கல்வி மற்றும் மருத்துவ நலன் சார்ந்த கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

மொராக்கோவில் 25 வயதுக்குட்பட்ட இளைஞர்களில் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமானோர் வேலையில்லாமல் இருப்பதால் இந்தப் போராட்டங்கள் பற்றி எரிந்தன. ஷென் இசட் 212 என்று அறியப்படும் தலைவர் இல்லாத இயக்கம் ஏற்பாடு செய்துள்ள இந்த ஆர்ப்பாட்டங்கள், அந்நாட்டை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளன. இவை, மொராக்கோவில் பல ஆண்டுகளுக்குப் பிறகு நடந்த மிகப்பெரிய ஆர்ப்பாட்டங்களில் ஒன்றாக மாறியது. நாடு முழுவதும் ஆர்ப்பாட்டக்காரர்களில் ஏறத்தாழ 70% பேர் 18 அகவை கூட நிரம்பாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மடகாஸ்கர்

ஆப்பிரிக்க நாடான மடகாஸ்கரில் நீண்ட காலமாக நிலவி வரும் கடுமையான மின்வெட்டு மற்றும் குடிநீர்த் தட்டுப்பாட்டால் மக்கள் தொல்லைக்குள்ளாகி வருகின்றனர். இதைக் கண்டித்து, அண்மைக் காலமாகத் தலைநகர் அண்டனானரிவோவில் இளைஞர்கள் மாபெரும் போராட்டத்தைத் தொடங்கினர். ‘ஷென் இசட்’ மற்றும் ‘லியோ டெலஸ்டேஜ்’ என்ற பெயர்களில் சமூக வலைதளங்கள் மூலம் இவர்கள் ஒருங்கிணைக்கப்பட்டனர்.

கென்யா

கிழக்கு ஆப்பிரிக்க நாடான கென்யாவில், வரியைப் பல மடங்கு உயர்த்தக் கூடிய “நிதி மசோதா 2024” என்ற மக்கள் பகை சட்டம், கடந்த சூன் மாதம் 25- ஆம் நாள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இது நடுத்தரவகுப்பை மேலும் சுரண்டி முதலாளிகளுக்குக் கடன் தள்ளுபடி வழங்குகிறது. இதனால், அந்நாட்டில் மக்கள் போராட்டம் வெடித்தது; மசோதா நிறைவேற்றப்படுவதற்கு எதிராக நாடாளுமன்றத்தைக் கைப்பற்று (Occupy Parliament) என்ற முழக்கத்தின் மூலம் சமூக ஊடகங்களில் இளைஞர்களுக்கு அழைப்பு விடப்பட்டது. இதன் விளைவாக இலக்கக்கணக்கான இளைஞர்கள் திரட்டப்பட்டு சட்ட முன்வரைவு(மசோதா) நிறைவேற்றப்பட்ட அன்று, நாடாளுமன்றம் முற்றுகையிடப்பட்டுத் தீ வைக்கப்பட்டது.

பிலிப்பைன்ஸ்

ஊழலுக்கு எதிராக பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் வீதிகளில் இறங்கிப் போராட்டம்

நடத்துகின்றனர், "நாங்கள் வறுமையில் வாழும்போது, அவர்கள் எங்கள் வரிகளை ஆடம்பர கார்கள், வெளிநாட்டு பயணங்கள் மற்றும் வணிக ஒப்பந்தங்களுக்குப் பயன்படுத்துகிறார்கள் என்பது வேதனை அளிக்கிறது." என்ற மாணவனின் குரல் டிரெண்டிங்கானது குறிப்பிடத்தக்கது. இதன் பின்னணியில், நாடு பெரும் அரசியல் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

பிலிப்பைன்ஸ் ஷென் இசட் இளைஞர்களின் போராட்டம் குறித்து, "கடந்த 15 ஆண்டுகளாக டிஜிட்டல் இணைப்பால் உருவான இளைஞர்கள் தலைமையிலான உலகளாவிய போராட்ட அலைகளின் சமீபத்திய அலை" என்று ஷெர்மனியின் 'இன்ஸ்டிட்யூட் ஃபார் க்ளோபல் அண்ட் ஏரியா ஸ்டடீஸ்' நிறுவனத்தின் ஷான்ஜிரா சோம்பட்பூன்சிரி தனது கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

"இளைஞர்கள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வெகுஷன இயக்கங்களை நடத்துவது புதிதல்ல," என்று கூறும் சர்வதேச அமைதிக்கான அமெரிக்க சிந்தனைக் குழுவான கார்னகி எண்டோமென்ட்டின் மூத்த ஆய்வாளர் ஸ்டீவன் ஃபெல்ட்ஸ்டீன்,

2001- ல் பிலிப்பைன்ஸில் நடந்த இரண்டாம் மக்கள் சக்தி புரட்சியில் எஸ்எம்எஸ் உரைச் செய்திகள் முக்கிய பங்கு வகித்தன. இது தான் டிஜிட்டல் கால போராட்டங்களின் தொடக்கமாக அமைந்தது என இந்த நிகழ்வை இன்னும் பின்னோக்கி பார்க்கிறார்.

ஆனால், இப்போது மொபைல் போன்கள், சமூக ஊடகங்கள், மெசேஜிங் ஆப்கள், மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றின் பரவலான பயன்பாடு மக்களை ஒன்றிணைப்பதை மிக எளிதாக்கியுள்ளது.இதுதான் ஷென் சி வளர்ந்த சூழல். இப்படித்தான் அவர்கள் தொடர்பு கொள்கிறார்கள். அவர்கள் ஒருங்கிணைப்பதும் இதன் இயல்பான வெளிப்பாடு தான் ," என்று கூறுகிறார். இதை நாம் எல்லா நாடுகளுக்கும் பொருந்திப் போவதைப் பார்க்க முடிகிறது.

இந்தியாவில், குறிப்பாக மணிப்பூரில் இரண்டு பழங்குடியினப் பெண்கள் மைத்தேயி சமூக ஆண்கள் கும்பல் ஒன்றால் நிர்வாணப்படுத்தப்பட்டு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படும் வீடியோ ஒன்று 2023 இல் (ஷூலை 19) வெளியாகி நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியதும், மணிப்பூரில் லட்சக்கணக்கான குக்கி இன மக்கள் கிளர்ந்தெழுந்ததையும் நாம் பார்த்திருக்கிறோம்.

அதே போல், தமிழ்நாட்டில் 2017 இல் நடைபெற்ற சல்லிக்கட்டு ஆதரவு போராட்டங்கள் என்பது இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். சல்லிக்கட்டிற்கு ஆதரவாக தமிழ்நாட்டிலும், தமிழ்நாட்டுக்கு வெளியேயும் தைப் புரட்சி, மெரீனாப் புரட்சி, இளைஞர்கள் புரட்சி என்று பல்வேறு பெயர்களால் இன்றும் குறிக்கப்படும் ஷல்லிக்கட்டுப் போராட்டம் பல லட்சக்கணக்கான இளைஞர்களை எந்தக் கட்சியின் தலைமையும் இல்லாமல் திரட்டியதை நாமறிவோம். சமூக ஊடகங்கள் இதில் பெரும் பங்காற்றின. இப்படி சமீப காலமாக இணைய ஊடகங்கள் மூலம் லட்சக்கணக்கான இளைஞர்கள் ஒன்று திரண்டு போராட்டங்கள் நடக்க தொடங்கி உள்ளன.

சமூக ஊடகங்களின் மூலம் பதியப்படும் பதிவுகள் இப்போது முன்பை விட மிகவும் வேகமாகவும் தொலை தூரங்களுக்கும், மூளை முடுக்கெல்லாம் பரவுகின்றன. இது கோபத்தையும் ஒற்றுமையையும் அதிகரிக்கிறது.

"சமூக ஊடகங்கள், சாதாரண பதிவுகளை அரசியல் ஆதாரமாக மாற்றிவிட்டன. பல சமயங்களில் அவை மக்களை ஒருங்கிணைக்கும் குரலாக மாறுகின்றன" என்று ஆஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தின் சமூகவியலாளர் அதீனா சரன்னே ப்ரெஸ்டோ கூறுவது குறிப்பிடத்தக்கது.

ஆனால் அதே நேரத்தில், அப்போராட்டங்கள் கடும் அடக்குமுறைக்கும் ஆளாக்குகின்றன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். போராட்டத்தை வழிநடத்த அரசியல் அனுபவமுள்ள தலைமையற்ற இயக்கங்கள் போராட்டத்தின் தன்மையை மாற்றிவிட வாய்ப்பு உள்ளன.

சமூக ஊடகங்கள் நீண்டகால மாற்றத்திற்காக வடிவமைக்கப்பட வில்லை. அவை அல்காரிதம்கள், வெறுப்பு உணர்வு மற்றும் ஹேஷ்டேக்குகளை நம்பியிருக்கின்றன," என்று ஸ்டீவன் ஃபெல்ட்ஸ்டீன் கூறுவதை நாம் மறுக்க முடியாது. அதனால், உண்மையான மாற்றம் ஏற்பட, சமூக வலைதளங்களில் தொடங்கும் இயக்கங்கள் நீண்டகால பார்வையுடனும், உண்மையான மனித உறவுகளுடனும் இணைந்த அமைப்பாக மாற வேண்டும்.

சமூக வலைதளப் போராட்டங்களை வேலைநிறுத்தங்கள், பேரணிகள் போன்ற பாரம்பரிய எதிர்ப்பு வடிவங்களுடன் அமைப்பு ரீதியாக இணைக்க வேண்டும்.

இந்தியாவில் அரசியல் ரீதியான, அமைப்பியல் ரீதியான வலுவான தலைமைகளைக் கொண்டு அமைப்பாக்கப்பட்ட தேசிய விடுதலை இயக்கங்கள், மாவோவிய இயக்கங்கள், பொதுவுடமை இயக்கங்களே ரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டுள்ளன.

கடந்த செப்டம்பர் மாதம் லடாக் ஷென் தலைமுறையினர் மற்றும் பிற லடாக்கியர்கள், மாநில அந்தஸ்து மற்றும் அரசியல் சாசனத்தின் ஆறாவது அட்டவணையின் கீழ் சிறப்புப் பாதுகாப்பைக் கோரி, அமைதியான போராட்டங்களை நடத்தினர். ஆனால், செப்டம்பர் 2025- ல் இந்தப் போராட்டம் வன்முறையாக மாறியது, இதில் நான்கு பேர் உயிரிழந்ததோடு முடிவுக்கு வந்தது.

எனவே, சமூக ஊடகங்களின் மூலமாக ஒருங்கிணைக்கப்படும் போராட்டங்கள் சமூக இயக்கங்கள், அரசியல் கட்சிகளுக்கிடையேயான ஒத்துழைப்பை உருவாக்கும் கூட்டணிகள் முக்கியமானவை. எனவே, இசட் தலைமுறைக்கு அமைப்பின் அவசியத்தை நாம் உணர்த்த வேண்டும், முகநூலும், வாட்ச்அப் - மட்டும் புரட்சியை உருவாக்க முடியாது என்பதை புரிய வைக்க வேண்டும்.

ஒரு காலத்தில் அரசியல் விவாதங்களின் துடிப்பான மையங்களாக இருந்த பல்கலைக்கழகங்களில் மாணவர் சங்கத் தேர்தலை தடை செய்து விட்டு அவர்களை தற்குறிகள் என்று நாம் இன்று கூறுவது சரியான போக்கு அல்ல. அதே போல் அவர்களது போராட்டத்திலிருந்து நாம் விலகி நிற்காமலும் நமது போராட்டங்களிலிருந்து அவர்களை விலக்கி வைக்காமல் எதிர்காலத்தை கட்டமைக்க வேண்டும். இசட் தலைமுறையினர் மிகவும் துடிப்பானவர்கள், தெளிவானவர்கள், எதையும் விரைவாக உள்வாங்கி கொள்ளக் கூடியவர்கள் அதே நேரம் விளைச்சலை உடனடியாக எதிர்பார்க்கக் கூடியவர்கள் . எனவே அவர்களைப் புரிந்து கொண்டு அவர்களை அமைப்பாக்கி, அரசியல் படுத்தி எதிர்காலத்தை உருவாக்க வேண்டும்.

இந்தியாவில் அனைத்து நெருக்கடிகளையும் இளந்தலைமுறை சந்தித்துக் கொண்டுதான் இருக்கின்றனர், இந்தியாவில் உள்ள அனைவருக்கும் ஒரே மாதிரியான நெருக்கடிகள் இல்லை, இந்தியாவில் உள்ள பல்வேறு தேசிய இனங்களும் பல்வேறு விதமான நெருக்கடி சந்தித்து வருகின்றன. அதை இளைஞர்கள் புரிந்து கொண்டு தான் இருக்கின்றனர், உள்ளுக்குள் கோபத்தை வைத்துக்கொண்டுதான் இருக்கின்றனர், அதை தங்களது சமூக வலைத்தளங்களில் வெளிப்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றனர். அவர்களுக்கு அமைப்பின் தேவையை உணர்த்தி மாரக்சிய-லெனினியக் கோட்பாட்டின், பெரியார் அம்பேத்கர் கருத்தியலின் தேவையை புரிய வைத்து அமைப்பாக்குவோம். அதன் வழி மக்கள் திரள் போராட்டங்களைக் கட்டமைப்போம்.

தத்தையின் முதுகில் புத்தகக்கூடு
கண்ணனின் குறும்பை வாங்கும் காவு..

வகுப்பைந்து எட்டுக்கு பொதுத்தேர்வென்று
அழகின் சிரிப்பை வைக்கும் அடகு

எழவு எட்டைப்போல குழவியின்
நெஞ்சில் சோகம் அப்பி
குமைந்தழவைக்கிறது கல்வி..

வண்ணத்துப் பூச்சிக்கு அளித்திட்ட
வன்கொடுமைச் சட்டம்..
அண்ணாருக்கோ
கிட்லராவதே திட்டம்..

நீளக்கால் சட்டையிட்டு நடக்கும் நிலவை
நீட்டுத் தேர்வைப்போல் இம்சித்து
நீட்டிமுழக்கும் கல்வி..

மகுட தோரணத்தை மனப்பாடமெனும்
மண்ணுக்குள் புதைக்கும் கல்வி..

பிஞ்சு விரல்களுக்குள்
பொதுத் தேர்வுயெனும் பீரங்கியைச்
சொருகும் குலக்கல்வியாம் கல்வி...

- சந்திமாவோ

தமிழ்நாடு 38 - திங்களிதழ் / தி.பி. 2056, நளி (நவம். திசம்.2025)

தூய தமிழ் இயக்கம்

110 ஆண்டுகள் செயல் முயற்சிகளும் தேவையும்

பொழிலன்
தமிழக மக்கள் முன்னணி

ஆர்எஸ்எஸ் இயக்கம் தோன்றுவதற்கு முன்பே தூய தமிழ் இயக்கம் தோன்றி விட்டது. தூய தமிழ் இயக்கத்தைத் தொடங்கிய நிலையில் தமிழ், பெருமளவு சமசுக்கிருதக் கலப்பைக் கொண்டிருந்தது. இசுலாமியர்கள் படையெடுப்பினால் அரபுச் சொற்களும், களப்பாளர் ஆட்சியால் மிக குறைவான நிலையிலே பிராகிருதச் சொற்களும் தமிழில் கலந்திருந்தன.

ஆரியப் பார்ப்பனர்களின் ஊடுருவலாலும் அதிகாரத்தாலும் பண்பாட்டுச் சீரழிப்பாலும் சமசுக்கிருதக் கலப்பு திருக்குறள் காலத்திற்கு முன்பிருந்தே மெல்ல தொடங்கிவிட்டது.

தமிழில் அதிகப்படியாகச் சமசுக்கிருத கலப்பு ஏற்பட்டது சமயங்களின் வளர்ச்சிக் காலங்களில்தாம் என்று பாவாணர் விளக்கப்படுத்துவார்.

அதற்கு முன்பு சமண புத்தங்கள் நுழைந்திருந்தாலும் பாலியோ பிராகிருதமோ தமிழில் பெருமளவில் கலந்துவிடவில்லை. பண்பாட்டளவில் மெய்யியலில் வாழ்வியல் நிலைகளில்தாம் கருத்துகள் பரிமாற்றம் நடைபெற்றன. அவற்றைக் கலப்பு என்பதைவிட கருத்தியல் வளர்ச்சி என்றே ஏற்க முடியும்.

ஆனால், ஆரியப் பார்ப்பனியத்தின் வைதீக வருணாச்சரம முறைகள் தமிழிய அறவாழ்வுக்கும் பொதுமை வாழ்வுக்கும் நேர் எதிரானவை. எனவே அவர்களின் கலப்பு தமிழர்களின் மெய்யியலைச் சிதைக்கவும், வாழ்வியல் முறைகளையே களவாடவும் மாற்றவும், மொழிகளின் சிறப்புகளைச் சீரழிக்கவும் செய்தன.

ஆரியப் பார்ப்பனியம் பழக்கிக் கொண்ட சமசுக்கிருத மொழி என்பது அவர்களின் வேத வல்லொலிப்பு மொழியோடு பிராகிருதமும் பாலியும் தமிழின் அடிப்படைகளும் கலந்து உருவாக்கப்பட்டது.

சமசுக்கிருதம் என்பதே கலந்து செய்யப்பட்டது எனும் பொருளுடைய சொல்..

குப்தர் காலத்திற்கு முன்பு வரை சமசுக்கிருதம் என்னும் சொல் மொழியைக் குறித்ததாகத் தெரியவில்லை.

இலக்கண நூலாகக் கருதப்படும் அசுட்டாத்தியாயி மௌரியர்கள் காலத்தில் எழுதப்பட்டதாகச் சொல்லப்படுவது ஏற்க இயலாதது.

அப்படி அந்த நூல் எழுதியதற்கான எந்தப் பதிவும் தேவையும் மௌரியர் காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. (குப்தர்கள் காலத்திலேயே அதாவது கி.பி. நான்காம் நூற்றாண்டிலேயே அசுட்டாத்தியாயி தொகுத்து எழுதப்பட்டதாக ஆய்வடிப்படையில் நிறுவப்பட்டிருக்கிறது.)

மௌரியர் காலத்தில் வந்த செலுக்கசு நிக்கோட்டார் என்னும் கிரேக்க நாட்டுத் தூதர் எழுதிய இண்டிகா - என்னும் நூலுள் மௌரிய மக்களிடம் எழுத்துப் பழக்கம், எழுத்தறிவு இல்லை என்பதாகப் பதிவு இருக்கிறது. அசோகனின் கல்வெட்டில் உள்ள எழுத்துமுறைகளும் பாலியும் பிராகரதமுமே ஆகும்.

சமசுக்கிருதக் கல்வெட்டுகள் கி.பி. முதலாம் நூற்றாண்டுக்குப் பிறகே உள்ளன என்பதும், எழுதப்பட்ட வேதங்கள் 14ஆம் நூற்றாண்டிலேயே எழுத்தளவில் தொகுக்கப்பட்டுள்ளன என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டியவை.

தொடக்கத்தில் வேதங்கள் வட்டெத்திலும் பின்னரே தேவநாகரி எழுத்து முறையிலும் எழுதப்பட்டதாக அறிய முடியும்.

இவற்றின் வழியாகவெல்லாம் நாம் அறிவது எழுத்து மொழியாகச் சமசுக்கிருதம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்புவரை இல்லை என்பதும், ஆரியர்கள் தமிழ்நிலம் வந்த பின்னரே எழுதவும் இலக்கணத்தை, பிற அறிவியல் ஆக்கங்களைத் தமிழகம் உள்ளிட்ட பல பகுதியில் இருந்து களவாடி வேத புராணங்கள் உள்ளிட்ட சமசுக்கிருத நூல்களில் இணைத்துக் கொண்டனர் என்பதும் நிறுவப்பட்டுள்ள செய்திகள்..

இவையெல்லாம் ஒருபுறம் இருக்க..

தங்களின் அதிகாரத்தை தாம் ஊடுருவிய நிலங்களில் எல்லாம் நிறுவ வேண்டும் எனும் நோக்கத்திற்காகவே வருணாச்சிரமத்தைத் திணிப்பதும், வரலாற்றைத் திரிப்பதும், மொழிகளைச் சிதைப்பதுமாகத் தொடர்ந்து திமிரெடுத்து இயங்கியது ஆரியப் பார்ப்பனியம்..

அரசுகளைக் கூறு பிரித்துத் தனக்குக் கீழ் ஆட்சி அதிகாரங்களைக் கொண்டு வந்து இயக்கத் தொடங்கியதால் சமயங்கள், வழிபாட்டு முறைகள், கடவுளர் பற்றிய கருத்துகள், புராணத் தொன்மங்கள், ஊர்ப் பெயர்கள், ஆள் பெயர்கள், கடவுளர் பெயர்கள் என எல்லாவற்றையும் சமசுக்கிருத வயப்படுத்தியது ஆரியப் பார்ப்பனியம்..

தமிழ் மொழி திரிக்கப்பட்டுக் கலப்பு மொழியாக ஆக்கப்பட்டு, தெலுங்கு, கன்னட, துளு, மலையாளம் எனப் பல மொழிகள் உருவாக்கப்பட்டு அவற்றையெல்லாம் சமசுக்கிருதத்தின் தொடர்புடையன போல் நிலைப்படுத்திக் கொண்டனர்..

திரிந்து போன அவர்களிடமெல்லாம் ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்பும், சமசுக்கிருத எதிர்ப்பும் இல்லாமல் போனது..

திரிந்து போனவர்களின் அரசுகளைத் தன் வயப்படுத்திக் கொண்டு தமிழ் அரசுகளை எதிர்த்தனர், வீழத்தி ஆட்சியும் செய்தனர்..

தமிழ் அரசர்களுக்குள்ளாகவே பகை மூட்டினர்.. போரிட வைத்து எதிரிகளாக்கினர்..

இந்தக் காலங்களில் எல்லாம் சமசுக்கிருதம் வலிமையாகத் திணிக்கப்பட்டது.. அரசர்கள் பெயர்கள், குடிமக்கள் பெயர்கள், கடவுளர் பெயர்கள், ஊர்ப் பெயர்கள் எல்லாம் சமசுக்கிருதம் ஆக்கப்பட்டன.. பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள் படிப்படியாக சமசுக்கிருதமாகத் திரிக்கப்பட்டன.

ஆரியப் பார்ப்பனியத்தின் அதிகாரத் துணையோடு வந்தேறிகளின் ஆட்சி நடைபெற்றது.. தமிழ் படிப்படியாகச் சீர்குலைக்கப்பட்டது..

ஆங்கிலேயர்களின் வரவும், அவர்களின் ஆய்வுகளும், முதலாளியக் குடிநாயக முறை அறிமுகப்படுத்தமும் படிப்படியாகச் சில வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.. வரலாற்றின் அவல நிலைகள் தமிழ் அறிஞர்களுக்குப் புலப்பட்டது.. விழிப்புணர்வு தோன்றியது..

அரசியல், பொருளியலில் தேவைப்பட்ட உரிமை மீட்பு உணர்வுகள் மொழி நிலையிலும் ஏற்பட்டது..

குமுக அவல நிலைகளிலிருந்து தமிழர்களை மீட்கிற உணர்வு பலருக்கும் ஏற்பட்டது.. ஆரியப் பார்ப்பனியத்தை விளங்கிக் கொண்டனர்..

படிப்படியாக எதிர்க்க முனைந்தனர்..

திருவள்ளுவர் காலத்திலேயே தோன்றிய ஆரியப்பார்ப்பனிய எதிர்ப்புணர்வு சித்தர்கள் காலங்களில் வளரத் தொடங்கியது..

வள்ளலார் ஆரியத்தையும் சமசுக்கிருதத்தையும் எதிர்த்தார்.. சிவனியத்தால் ஆரியத்தை வெல்ல முடியாது என்று உணர்ந்து தூய நன்னெறி கண்டார்..

மனோன்மணியம் சுந்தரனார், அயோத்திதாசப் பண்டிதர், வ. உ. சிதம்பரனார், பரிதிமாற் கலைஞர், பாண்டித்துரையார் போன்றோர் தூய தமிழ்ச் சிந்தனை கொண்டிருந்தாலும் மொழி உரிமை மீட்பில் ஓரளவிலானச் செயற்பாடுகளாகவே அவர்களின் முயற்சிகள் இருந்தன.

ஆங்கிலத்திலும், சமசுக்கிருதத்திலும் புலமை பெற்றிருந்த மறைமலை அடிகளார் சமசுக்கிருதத்தை அது தமிழில் ஏற்படுத்திய கலப்பை எதிர்த்துத் தூய தமிழுக்காக இயக்க முயற்சியை முன்னெடுத்தார்.. மறைமலை அடிகளார் அவர்களின் மகள் நீலாம்பிகை அம்மையாரின் முனைப்பும் செயற்பாடுகளும் தூய தமிழ் முயற்சியில் குறிப்பிடப்பெற வேண்டியவை..

கி.பி. 1916 இல் தூய தமிழ் முயற்சிகள் இயக்கமாகத் தோன்றியது..

தன் பிள்ளைகளின் பெயர்களை மாற்றியதோடு, வேதாசலம் எனும் தன் பெயரையும் மறைமலை அடிகள் என்று மாற்றிக் கொண்டார்.. "அது என்ன மரம், செடி, கொடிகள்" - என்று ஆரியப் பார்ப்பனியம் அடிகளாரைப் பகடி செய்தது..

தூய தமிழ் அவரைத் தலைநிமிர்த்தி நடையிட வைத்தது.. தமிழுக்காகவும் இந்தி எதிர்ப்புக்காகவும், சமசுக்கிருத எதிர்ப்புக்காகவும், தமிழ்நாட்டு உரிமைக்காகவும் தலைமகனாய் நடையிடத் தொடங்கினார் மறைமலை அடிகளார்..

சிவனியச் சார்புடையோரெல்லாம் ஆரியத்திடம் அடிபணிந்து கிடந்த அந்தக் காலச் சூழலில் ஆரியத்தை, சமசுக்கிருதத்தை எதிர்த்து நின்ற தலைமகன் அவர்..

ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்புக்கருத்துகளிலும், மொழி அளவிலும் நீங்கள் எங்களுக்குத் தலைவர் என்று மறைமலையடிகளாரை அடையாளப்படுத்தினார் பெரியார்.. பெண்கள் உரிமை மாநாடுகளுக்குத் தலைமை தாங்கும் சிறப்புக்குரியவராக நீலாம்பிகை அம்மையாரையே முதன்மைப்படுத்தினார் பெரியார்..

ஞானசாகரம் என்று தான் நடத்தி வந்த இதழை 'அறிவுக்கடல்' எனத் தமிழில் மாற்றி நடத்தினார் மறைமலையார். தமிழ்த் திருமணம், தமிழ்(திருவள்ளுவர்) ஆண்டு நடைமுறைப்படுத்தம், தமிழர் மதம் எனும் கருத்துகளை நடைமுறைப்படுத்தினார்..

அவரின் பெருமுயற்சியால் ஈர்க்கப்பட்ட அறிஞர் பெருமக்கள் சிலர் அவரைப் பின்பற்றிச் செயல்படத் தொடங்கினர்.

1938இல் இந்தி எதிர்ப்பை முன்னிறுத்தி நடைபெற்ற மொழி போராட்டத்தின் மறைமலை அடிகளார், சோமசுந்தர பாரதியாருடன் பெரியார் அவர்களும் இணைந்து போராட்டத்தை வெகுமக்கள் போராட்டமாக வளர்த்தெடுத்தா்.. தூய தமிழ் இயக்க முயற்சி தன்மதிப்பு(சுயமரியாதை) இயக்கத்தாரிடமும் பரவியது..

இருப்பினும் அரசு ஆதரவு இல்லாததாலும், ஊடக வலு இல்லாததாலும், பெருமளவில் இயக்க முயற்சிகள் இல்லாததாலும் தூய தமிழ் இயக்கம் வெகுமக்கள் இயக்கமாக வளரவில்லை..

மறைமலை அடிகளாரை அடியொற்றியவர் என்ற நிலையில் இருந்து மேலும் மேம்பட்டு, மொழியியல் துறையின் தொடக்க முயற்சிகளில் இருந்த ஆய்வுகளை மேலும் செழுமையான முயற்சிகளை மேற்கொண்டு எண்ணற்ற ஆக்கங்களைச் செய்தார் மொழியியல் அறிஞர் தேவநேயப் பாவாணர்.

அவரின் ஆக்கப் பணிகள் குடத்திலிட்ட விளக்காக இருக்க அவரின் அறிவாக்கக் கருத்துகளை குன்றின் மேல் இட்ட விளக்கு போல் வெளிக்கொண்டு வந்த முயற்சிக்குப் பாவலரேறு பெருஞ்சித்திரனாரும் அவரின் தென்மொழி முயற்சிகளுமே அடித்தளமாக அமைந்தன..

தென்மொழி இதழ், ஓர் இதழாக மட்டும் இல்லாமல் பெரும் இயக்க முயற்சியோடு தூய தமிழைப் பரப்பியது, அக்கால மாணவர்களிடையே இளைஞர்களிடையே ஆசிரியப் பெருமக்கள் இடையே தென்மொழி வலுவாகக் காலூன்றித் தூய தமிழை இயக்கப்படுத்தியது..

பாவாணர் அவர்களும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களும் நூற்றுக்கணக்கான தமிழ் அறிஞர் பெருமக்களும் இணைந்து உலகத் தமிழ்க் கழகம் தோற்றி வைக்கப்பெற்று, தூய தமிழ் முயற்சிகள் வலுப்பெறத் தொடங்கின.

தென்மொழியோடு மேலும் பல இதழ்கள் தூய தமிழில் வெளிவந்தன.

திராவிடர் கழகத்திலிருந்து வளர்ந்த திராவிட முன்னேற்றக் கழகம் தூய தமிழ் நடைமுறைப்படுத்தத்திற்கான முயற்சிகளையும் அரசியல் அளவில் செய்தது. திமுகவினர் பலர் தங்களின் பெயர்களைத் தூய தமிழ்ப் படுத்திக் கொண்டனர். தங்கள் பிள்ளைகளுக்குத் தூய தமிழில் பெயர் சூட்டினார், தென்மொழி தொடர்புடைய பலர் திமுகவில் இருந்த நிலையில், 1967 இல் திமுக ஆட்சிக்கு வந்த பிறகு புழக்கத்திலிருந்த எண்ணற்ற சமசுக்கிருதச்சொற்களைத் தூய தமிழ்ப் படுத்தி வழக்கப்படுத்தினர்.

பல நிலைகளில் சமசுக்கிருத மொழி வழக்கம் மெல்ல மெல்ல தூக்கி எறியப்பட்டுத் தூய தமிழ் வழக்கத்திற்கு வந்தது..

இந்தியப் பொதுவுடைமையருக்குத் தூய தமிழ்க் கருத்து ஒவ்வாமையாகவே இருந்தது. மொழி, கருத்தை வெளிப்படுத்துவதற்கான கருவி என்கிற அளவிலேயே அவர்கள் தூய தமிழைப் புறக்கணித்தனர்.

பொதுவுடைமைக் கட்சிகளின் மூலவர்களான மார்க்சு, ஏங்கல்சு, இலெனின், மாவோ ஆகியோரின் நூல்களை மொழி பெயர்த்தவர்கள் எளிய மக்களின் மொழியில் அல்லாது சமசுக்கிருதக் கலப்போடான கொடுநிலையிலேயே மொழி பெயர்த்தனர்..

பெரும்பாலான மார்க்சிய ஆக்கங்களின் மொழிபெயர்ப்புகள் எல்லாம் அன்றைக்கு ஆங்கிலம் தெரிந்த ஆரியப் பார்ப்பனர்களாலேயே செய்யப் பெற்றன.

அவர்கள் அவர்களின் வழக்க மொழியிலேயே பெயர்ப்பு செய்ததால் சமசுக்கிருதக் கலப்பு மிக அதிகமாக நடைபெற்றது..

உருசிய மொழியில் ஒரு குறிப்பிட்ட சூழலை விளக்குவதற்குரிய nedochoty, nedostatki, probely என்னும் சொற்கள் இருக்கும் போது, அதே பொருளைத் தருகிற defekty என்னும் அயல்மொழிச் சொல்லை உருசிய மொழியில் ஏன் ஆள வேண்டும்- என்று தோழர் இலெனினின் கேள்வி (இலெனின் தொகை நூல் 30, பக்கம் 298) இந்திய மார்க்சியர்களின் அறிவுக்கு இன்னும் உணர்த்தவில்லை..

மொழிகள் கலந்தால் தானே பல்வேறு தேசங்களின் உழைக்கும் மக்கள் ஒன்று சேர முடியும் என்று இயங்கியல் தெரியாமல் கருத்துகூறிக் கொண்டிருக்கிற இந்திய மார்க்சியர்களும் உண்டு..

பாட்டாளிகளின் உறவில் ஏற்படுகிற இயல்பான உறவு நிலையில் உருவாகிற கலப்பு என்பதற்கும், அதிகார வகுப்பால் (வர்க்கத்தால்) அடக்கப்பட்ட நிலையில் வாழ்வுரிமைகளைக் குறிப்பாக மொழி உரிமையை இழந்து அதிகார வகுப்பின் மொழியில் கரைந்து போவதற்கும் உள்ள வேறுபாடுகளைக்கூட அவர்கள் இன்னும் உணரவில்லை.. அத்தகைய கலப்பு எந்த வகையில் ஞாயமானதாக இருக்க முடியும்?

ஆக, மொழியின் தூய்மைக்கான போராட்டம் என்பது மொழி வழியான அதிகார வகுப்பின் அடக்கு முறையை எதிர்த்த போராட்டமே ஆகும்..

அதிகார வகுப்பின் அனைத்து நிலை அடக்குமுறைகளையும் எதிர்க்கிற நோக்கம் கொண்ட உழைக்கும் வகுப்பினர், உழைக்கும் மக்களுக்கு மொழி இல்லை, இனமில்லை என்பதாகக் குருட்டு பாடம் படித்து, அதிகார வகுப்பின் மொழி வழியான அடக்குமுறைகளை ஏற்றுக் கொள்ள முடியுமா?..

தமிழில் குடமுழுக்கு செய்தால் தீட்டுப்பட்டுவிடும் என்கிற அதிகார வகுப்பின் நடைமுறையை எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியாதோ அவ்வாறே தமிழர்கள் திரு என்கிற தமிழ் அடைமொழிச்சொல்லை விட்டுவிட்டு ஸ்ரீ என்கிற சமஸ்கிருத சொல்லைத்தான் பயன்படுத்த வேண்டும் என்றால் அதை ஏற்றுக்கொள்ள இயலாது..

ஆக, மொழி கலப்பு என்பது சமன்மையில்லாத மக்கள் குமுகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் அல்லது தேசத்தின் மீது ஒடுக்குகிற அதிகார வகுப்பு மொழி வழியான திணிப்பை அல்லது கலப்பை ஏற்படுத்தினால் என்ன காரணத்திற்காகவும் அதை ஒத்துக் கொள்ள இயலாது..

அந்த அடிப்படையிலேயே, தூய தமிழ் இயக்க முயற்சிகள் அதிகார அடக்குமுறை மொழியை எதிர்த்தாகவேண்டியது என்று உணர வேண்டியுள்ளது..

அத்தகைய எதிர்ப்பு வினைகளை ஆற்றாமல் போகிற பொழுதுதான், ஒடுக்கப்படுகிற மக்கள் குமுகத்தின் நலனுக்கான கட்சிகள் என்று கூறிக்கொள்ளுகிற அவற்றின் மீது நமக்கு ஐயம் ஏற்படுகிறது.. அவை உண்மையிலேயே ஒடுக்கப்படுகிற மக்களுக்கான கட்சிகள்தாமா.. அல்லது அதிகார வகுப்பின் நலன்களுக்காக ஏதோ ஒரு வகையில் இணக்கம் கொண்டிருக்கிற கட்சிகளா என்கிற ஐயம் ஏற்படுகிறது..

இவை ஒரு புறம் இருக்க..

கடந்த காலங்களில் தூய தமிழ் இயக்கங்கள் எடுத்த முயற்சிகள் போதுமானவையா? அம் முயற்சிகள் சரியான கோணத்தில் முன்னெடுக்கப்பட்டனவா? - என்பன குறித்தும் ஆய்வு செய்ய வேண்டியுள்ளது..

மறைமலை அடிகளாரின் தூய தமிழ் முயற்சிகள் பொதுமக்கள் முயற்சியாக நடைபெறவில்லை.. மாணவர்கள் வட்டத்தில்கூட அது வளர்க்கப்படவில்லை.. அறிஞர்கள் அளவிலேயே அறிமுகமாகி இருந்தது..

பாவாணரின் ஆய்வுகள் அறிஞர்களுக்குப் பெரு வெளிச்சத்தை உருவாக்கியது. அவரின் அறிவாக்கங்களைத் தென்மொழி இதழின் வழியாக வெளி உலகிற்குப் பரப்பிய பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் முயற்சிகள் எண்ணற்ற மாணவர்களை உருவாக்கியது.. உலகத் தமிழ் மாநாடுகளில் பாவாணரும் அவரின் கருத்துகள் புறக்கணிக்கப்படவே, உலகத் தமிழ்க் கழகம் தூய தமிழ் ஆர்வலர்களைக் கொண்டு உருவாக்கிப்பெற்று, பலரை ஒருங்கிணைத்தது..

மொழி அளவிலோடுமட்டுமே முயற்சிகளை முன்னெடுத்து உரிமைகளை நிலை நாட்டிவிட முடியாது என்பதை அறிந்து இன உரிமை, நாட்டு உரிமைகளுக்காகவும் போராட்டங்களோடு செயற்பாடுகளை விரிவு படுத்தினார் பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

தூய தமிழ் இயக்க முயற்சிகள் தமிழ்நாட்டு உரிமை மீட்பு முயற்சிகளாகவும் வலுப்பெற்றது..

தூய தமிழ் தொடர்புடைய இளைய தலைமுறை தென்மொழித் தொடர்பில் தமிழ்நாட்டு அளவில் மட்டுமின்றித் தமிழர்கள் பரவி வாழ்கிற பகுதிகளில் எல்லாம் வலுவாக வளர்ந்தது..

மாநிலங்களை நசுக்கி இந்தியப் பார்ப்பனியத்தை வலுப்படுத்துகிற அரசியல் நெருக்கடியால் இந்தித் திணிப்பும், பன்னாட்டு நிறுவன வரவுகளால் ஆங்கில அதிகார ஆளுமையும் தமிழை மேலும் மேலும் சிதைத்து வருகின்றன..

இந்நிலையில், தமிழ் வழிக் கல்வி, தமிழில் வழிபாடு, ஆட்சி மொழியாக அலுவல் மொழியாக ஞாய மொழியாகத் தமிழைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளையெல்லாம் மிக முதன்மையாகத் தமிழ்நாடு அரசு முன்னெடுத்துச் செய்தேயாக வேண்டும்..

ஊர்ப் பெயர்கள், கடவுளர் பெயர்கள் இவற்றையெல்லாம் உடனடியாகத் தூய தமிழ்ப் படித்தியாக வேண்டும்..

தமிழ் வழியில் படித்தோருக்கு மட்டுமன்றி,
தமிழில் பெயர் வைத்திருப்போருக்கும்
உயர்கல்வியில், வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை அளித்தாக வேண்டும்..

தமிழ் நாட்டு உரிமைகளுக்கானப் போராட்டங்களுக்கு இடையில் தமிழ்நாட்டு அரசும், தமிழ் இயக்கங்களும் மேற்சொன்ன திட்டங்களைப் படிப்படியாகத் தொடர்ந்து செயற்படுத்திட வேண்டும்..

தமிழில் இல்லாத, தமிழ் இலலாத இந்தியத் திட்டங்கள் எல்லாவற்றையும் தமிழ்நாட்டிலிருந்து வெளியேற்றிட வேண்டும்..

தூய தமிழ் இயக்கங்கள் மறைமலை அடிகள், பாவாணர், பாவலரேறு வழித்தடத்தில் மிக வலிமையோடு செயல்பட்டாக வேண்டும்..

தமிழ் என்பதே தூய தமிழ்தான் என்பதை தெளிவுபடுத்தவும் வேண்டும்..

தூய தமிழ் இயக்கத்தின் நூற்றுப் பத்தாண்டுக் காலச் சிறப்பு இவற்றையெல்லாம் நமக்கு உணர்த்தட்டும்..